## கதவுகள் மறுபடி திறக்கலாம்

அனுராதா ரமணன்

# கதவுகள் மறுபடி திறக்கலாம்

## 1

''கெட்டி மேளம்!! கெட்டி மேளம்!!!''

மணப் பந்தலில் யார் யாரோ, அந்த ஒரு க்ஷண நேரத்துக்கு மியூஸிக் டைரக்டராக தங்களைப் பாவித்துக் கொண்டு, தலைக்கு மேல் இரட்டை விரலைத் தூக்கி பலமாய், சுளுக்கிக் கொள்ளும்படியாக ஆட்டுகிறார்கள்...

ஸ்ரீதருக்கு மனசு கொள்ளாத சந்தோஷம். ஓரப் பார்வையால் பக்கத்தில் அமர்ந்திருந்தவளைப் பார்க்கிறான். குனிந்திருந்த அந்த முகத்திலிருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை...

இந்தக் காலத்துப் பொண்ணுக்கு இவ்வளவு வெட்கமா...

ஆனாலும், இவள் தன் அம்மாவுக்கு ஏற்றவளாக இருப்பாள் என்கிற நினைப்பே நெஞ்சுக்கு ஆறுதலாய்...

அம்மா கொஞ்சம் அந்த காலத்து மனுஷி...இத்தனை வயசுக்கும், கிராமத்தில் ஒண்டியாய் சமைத்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். தன் ஒரே மகனுடன் இருக்க வேண்டும் என்றுதான் ஆசை...

எங்கே...அங்கேயெல்லாம் அவளது ஆசாரத்துக்கு சரிபட்டு வருமோ, வராதோ என்கிற பயம்...

MithraVintha

மருமகள் என்று ஒருத்தி இருந்தால்...அட, அவள் சமைத்துப் போட வேண்டாம் பாஷை தெரியாத ஊரில் ஒரு பேச்சுத் துணையாகவாவது ஆகுமே...

எழுபது வயதுக்கும், அவனுக்குத்தான் மகனுக்கு வரப் போகிறவளின் மீது எவ்வளவு ஆசை...

யமுனாவைப் பற்றி கல்யாணத் தரகர்தான் சொன்னார்:

''அம்மா அப்பா இல்லாதப் பொண்ணு. ஏதோ படிச்சிருக்கு...சித்தப்பா வீட்டுல இருந்தது இந்தக் காலத்துல ஒரு வயிறுன்னாலும், அதை நிரப்ப எத்தனை கஷ்டம்னு உங்களுக்குத் தெரியாதாம்மா... அதனால, இந்தப் பொண்ணை, பட்டணத்துல, பெரிய பணக்கார இடத்துல, கூடமாட உதவி செய்யறதுக்காக அனுப்பி வச்சுட்டா... பொண்ணுக்கு இருபது வயசாகிறது எத்தனை நாள்தான் கன்னி கழியாம வச்சிருக்கிறது சொல்லுங்க...''

ஜனகம்—ஸ்ரீதரின் தாய் இதை முழுமனதுடன் ஆமோதித்தாள்.

தரகருடன், அவள் மட்டுமேதான் போய் யமுனாவைப் பெண்பார்த்து விட்டு வந்து, ஸ்ரீதருக்கு ஒரு தபால் கார்டில் நாலு வரி, கிறுக்கி எழுதினாள்...

'பொண்ணு மகாலட்சுமி மாதிரி இருக்கா. எனக்கு என்னமோ, இவதான், என்னோட 'மருமக'ன்னு தோணுச்சு... உனக்கு எப்ப லீவு கிடைக்குமோ எழுது...கல்யாணத்தை சீக்கிரமா வச்சுட்டா தேவலை... என்னாலேயும் முடியல்லே...உனக்கு என் சிரமம் புரியும்னு நினைக்கிறேன்—அன்புள்ள அம்மா...'

அம்மாவின் கடிதத்துக்கு முன் வரையில். ஸ்ரீதர் தன் கல்யாணத்தைப் பற்றியோ, தனக்காக வருபவள் எப்படி



யெப்படி இருக்க வேண்டுமென்றோ கற்பனை செய்து கூடப் பார்த்ததில்லை...

சப்பாத்தி ஒன்றே பிரதானமான நகரில் தனக்காக கொஞ்சமே கொஞ்சம் அரிசியைக் களைந்து வைத்து தயிர் சோறாய் பிழுங்கி அதையே டிபன் பாக்ஸிலும் எடுத்துக் கொண்டு ஓடும் சாதாரண குமாஸ்தாவான அவனுக்கு, முதலில் தோன்றிய எண்ணமே—கல்யாணமானால் இந்த சம்பளத்தில் அம்மாவையும், பெண்டாட்டியையும் வைத்துக் கொண்டு சமாளிக்க முடியுமா என்பதுதான்...

'முடியாம என்னடா நம்ம கம்பெனி கூர்க்கா கூடத்தான் கல்யாணம் பண்ணிட்டு, குழந்தை பெத்துட்டு, குப்பை கொட்ட றான்...உன்னாலே முடியாதா?''

சக நண்பர்களின் உற்சாகமான ஊக்குவிப்பில்தான் அவன் யமுனாவை மணக்கவே சம்மதித்தான்...

இதோ—

கல்யாணத்துக்கு முன்தினம்தான் அவளை நேரே பார்த்தான்...

பார்த்தவுடனேயே, மனதுக்குள் ஒரே சமயத்தில் கோடிக்கணக்கான மல்லிகை அரும்புகள் புஷ்பித்தது போல...

ஒரு பெரிய நட்சத்திரம் வானிலிருந்து இறங்கி வந்து இவனெதிரே நிற்பதுபோல...

வடக்கே, பொருட்காட்சி சாலையில், தொலைவில் நின்று பார்த்த சந்தன சிற்பம்—இன்று இவனெதிரில் வணங்கி எழுந்தாற்போல...

'ஐயோ...ஐயோ...இத்தனை அழகும் எனக்கா.'

MithraVintha

'இதை நான் பத்திரமா பாதுகாக்க வேணுமே... கடவுளே.'

கையும் காலும் பரபரத்துப் போயிற்று ஸ்ரீதருக்கு. அம்மாவோ, அவனைப் பார்த்து, பெருமை பொங்கச் சிரித்தாள்

"என்னடா...பிடிச்சிருக்கா... வரதட்சணை, அது இதெல்லாம் பேசப்படாது...ரொம்ப சிரமப்படற குடும்பம்டா...கல்யாணத்தை ஏதோ ஒப்பேத்தி விட்டா சரி... நான் நம்ம பங்குக்கு குறைச்சல் இல்லாம என்னோட தங்க அட்டிகையையும் கைவளை ஒரு ஜோடியையும் போட தரா இருக்கேன்...கூறை சேலையும், தாலியும் மட்டும் வாங்கிடு...இந்தா ரெண்டாயிரம் ரூபா...எல்லாம், நீ கொடுத்ததுல சேர்த்து வச்சதுதான்டா..."

ஸ்ரீதர் அம்மாவை விழுந்து வணங்கினான்...கண்களில் நீர் துளிர்த்தது.

"அம்மா, அவ உனக்கு அனுசரணையா இருப்பாளோல்லியோ..."

கிழவி சிரித்தாள்.

"எழுபது முடிஞ்சுடுத்து...இனிமே எனக்கு என்னடா வேணும்...பதினஞ்சு வயசுல இந்த வீட்டுக்கு வந்தேன், பதினெட்டுல மூத்தது பொறந்தது...அதுக்கு அப்புறம் வரிசையா ஆறு...எல்லாத்தையும் மண் கரையானுக்கு அர்ப்பணம் பண்ணினேன்...முப்பத்தியெட்டுல எல்லாமே முடிஞ்சுடுத்துன்னு நான் நினைச்சுட்டிருக்கிற காலத்துல எட்டாவது குழந்தையா கிருஷ்ண விக்கிரகம் மாதிரி நீ பொறந்தே...உங்க தாத்தா பேரும் கிருஷ்ணமூர்த்திதான். பெரியவங்க பேரைச் சொல்லி எப்படி கூப்பிடறதுன்னு தான் உனக்கு ஸ்ரீதர்ன்னு உங்க அப்பா பேரு வச்சார்... எழுபது வயசுக்குள்ள எல்லாத்தையும் பார்த்துட்டேன் தான். ஒரு பேரக் குழந்தைய மட்டும் பார்த்துட்டா



போதும்—டாப்பா...எனக்கு வேற என்ன வேணும்... இல்லனாலுண்டு சாதம்...அரை தம்ளர் ரசம்...இதான் என் ஆகாரம்...இந்த உடம்புல இன்னமும் தெம்பு இருக்குடா... உன்னையும், அவளையும் உட்கார்த்தி வச்சு சமைச்சுப் போடக்கூடத் தெம்பு இருக்கு...என்ன சிரிக்கிறே..."

ஜனகம், மருமகள் வரப்போகிற குஷியில் பேசிக் கொண்டே போனாள்.

இதோ, தாலி கட்டி முடிந்ததும், ஸ்ரீதர் மனைவியுடன், அம்மாவின் காலில்தான் விழுந்து வணங்குகிறான்.

யமுனா...

பெயருக்கேற்ற மாதிரி—ஒரு நதியின் அழகும், கம்பீரமும், புனிதமும் கலந்து பெண்வடிவாகிய மாதிரி...

"பதினாறும் பெத்து, பெருவாழ்வு வாழணும்டியம்மா..."

ஜனகத்தின் ஆசிகள், தழுதழுத்த குரலில்...

பகல்நேரம் முழுக்க—கையில் மஞ்சள் பூசிய தேங்காயை வைத்துக்கொண்டு, ஒவ்வொருத்தர் காலிலும் விழுந்து வணங்கத்தான் நேரம் சரியாக இருக்கிறது அவர்களுக்கு.

சின்ன கிராமத்திற்கு மிகவும் எளிமையாய் நடக்கிற இந்த திருமணத்திற்கு ரிஸெப்ஷன், அது, இது இந்த அமர்க்களங்கள் எல்லாம் எதுவும் கிடையாது.

காலையில் கல்யாணம்...நடுப்பகல் இரண்டு மணி வரையில் வடை பாயசத்துடன் சாப்பாடு...நாலு மணியிலிருந்து ஏழுமணி வரையில் மணமக்களை உட்கார வைத்து நலங்கு...

வெற்றிலைப் பாக்கும், சந்தனமும், பூவும், கற்கண்டுமாய் இரைபடுகிறது...

MithraVintha

ஜனகம். இதில் பட்டும் படாமலுமாய் சற்று தள்ளி அமர்ந்து ரசித்துக் கொண்டிருக்கிறான்.

"இந்தாடி யமுனா...சந்தனத்தை எடுத்து, அவரு கழுத்துலப் பூசு..."

யமுனாவின் விரல், அவனது கழுத்தை ஸ்பரிசித்த போது மெல்ல நடுங்குகிறது...

அவள் குனிந்த தலை நிமிராமல் உதட்டுக்குள் சிரித்துக் கொள்கிறாள்...

பெண் வீட்டார் யாருக்கும் பாட்டு தெரியாது என்று சொல்லிவிட்ட காரணத்தினால்—பிள்ளை வீட்டைச் சேர்ந்த ஒருத்தி, இதற்காகவே காத்திருந்தாற்போல, 'கண்ரேன்'ப் பாடுகிறாள்.

"நாடாளும் மன்னனுக்கு, ராஜ குமாரனுக்கு—நல்ல
நாயகியாய் வேணுமென்று சுத்தி வந்தோம்;
ஊரெங்கும் சுத்தினோம்; உத்தமியாய் வேணுமென்று
உலகமெல்லாம் நாங்கள் பார்த்து வந்தோம்
பதி விரதையாய் வேணுமென்றுப் பார்த்துப்
பொறுக்கினோம்...

தொண்டை, கொஞ்சம் கரபுரவென்றாலும் அந்த நேரத்துக்கு அவளின் பாட்டு ரசிக்கும்படியாகவே இருக்கிறது...

"பாலக்காடு முதலானதும் பார்த்து வந்தோம்
சண்டை புடிக்காத சாந்த குணம் வேணுமென்று
தஞ்சாவூர் முதலானதும் பார்த்து வந்தோம்.
கோபங்கள் செய்யாத குணசாலி வேணுமென்று
கும்பகோணம் முதலானதும் பார்த்து வந்தோம்..."

பாடுபவளுக்கு மகா கற்பனை சக்தி... உண்மையில் பார்க்கப் போனால், ஸ்ரீதருக்காக இப்படி தேசம், தேசமாய் போய் யார் பெண் பார்த்தார்கள்...



மெலி ஜனகம்தான், சாலேஸ்வரக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு, தாள் கொண்டு வந்த [illegible] ஜாதகங்களை எடுத்துக் கொண்டு, ஜோஸ்யரிடம் நடையாய் நடந்தாள்.

ஜனகத்துக்கு வேண்டுமானால், தன் பிள்ளை உசத்தி. எல்லோருக்குமா உசத்தி?

"அவன் வடக்கே இருக்கான். யாருக்கும், பழக்கத்துக்கும் குறைச்சலே இல்லை... நல்ல புத்திசாலி. ஆயிரத்தி இருநூறு ரூபா சம்பாதிக்கறான்னா பார்த்துக்கோங்களேன்...அவன் அப்பா இருந்தா பூரிச்சுப்போயிருப்பார்..."

ஸ்ரீதர், யமுனாவை ஒரு முறை நிச்சயமாய் பார்க்கிறான்.

தலை குனிந்து உட்கார்ந்திருக்கிறாள். அவள்... விழியோரங்களில் மை, மெல்லியதாய் கரைந்திருந்தது—சிவந்த அழகான உதடுகள்... விரலால் கிள்ளி எடுக்கலாம் போல... ஆனால், அதில் சிரிப்புதான் இல்லை.

யாராவது சிரிக்கக் கூடாது என்று சொல்லியிருப் பார்களோ...

தேங்காயை உருட்டி விளையாடும் பொழுது கூட அவள் அசிரத்தையாகத்தான் இருப்பது போலத் தோன்றுகிறது...

ஒருகால், இவளுக்கு இந்த விளையாட்டெல்லாம் பிடிக்கவில்லையோ...

'கரபுர' தொண்டைக்காரி, அடுக்கடுக்காய் புகுந்த வீட்டில் அவள் செய்ய வேண்டிய சமையல் வகைகளை, பாடிக்கொண்டே போகிறாள்.

MithraVintha

''ஏழு மணிக்கு அடுப்பு மூட்டி டிகாக்ஷன் காச்சி
வைக்கணும்;
ஏந்தமாய் காப்பி நன்னாப் போட வேணும்;
ரவை உப்பு மாக்களோடு தோசை முதலானதும்
சொகுசாக பண்ணியங்கே வைக்க வேணும்;
கூட்டுக் கறிகளோடு குழம்பு ரசம் பண்ணணும்;
கூசாமல் தாளிச்சுக் கொட்ட வேணும்;
பருப்பு பச்சடிகளோடு பாங்காக சமைக்க வேணும்;
பணிக்கையாய் பாயசங்கள் பண்ண வேணும்...'

யமுனா இருப்புக் கொடுக்காமல் நெளிகிறாள்... ஒரே ஒரு முறை, தலையை உயர்த்தி, ஸ்ரீதரையும், சுற்றி நின்றவர்களையும் ஒரு பார்வை பார்த்து விட்டு, தலை குனிகிறாள்...மருதோன்றியில் சிவந்த விரல்கள், ஜமுக்காளத்தில் சிதறிக் கிடந்த பூக்களை, தன்னிச்சையாய் ஒன்று சேர்த்துக் கொண்டிருக்கின்றன...

'ஏ' பெண்ணே...நீ யார்...நேற்று வரையில் உன் கதை என்ன...உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா...உன் சுபாவம் எப்படிப்பட்டது— 'மூணுக்' கென்றால் கோபம் வருமா...அந்த அம்மாள் பாடுவது போல, அத்தனை அயிட்டங்கள் வேண்டாம்... ஏதோ ஒரு, குழம்பு, ரசம், கறி சமைத்து சோறு வடிக்கத் தெரியுமா...'

'தெரியாதென்றால் கவலைப்படாதே...நானிருக்கிறேன். நம்மோடு அம்மாவும் வருகிறாள். அம்மா ரொம்ப நல்லவள். உனக்கு எல்லாம் சொல்லித் தருவாள்...''

''நான், உன்னை தொந்தரவு செய்ய மாட்டேன்... பூப்போல வைத்துக் கொள்வேன்...உனக்கு என்ன வேண்டுமோ — இந்த ஏழையின் சக்திக்கேற்ப சொன்னால் வாங்கித் தருகிறேன்...'

ஸ்ரீதரின், தொண்டைக் குழிக்குள் வார்த்தைகள் புரள்கின்றன...



அன்றிரவு—

அவர்களை முதலிரவு படுக்கையறைக்குள் அனுப்பும் பொழுது இரவு மணி பத்து... கிராமத்து மக்களுக்கு. எல்லாமே சம்பிரதாயப்படி நடந்தாக வேண்டும்.

ஸ்ரீதரும், தன் தாயிடம் எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறான்தான்.

''இதெல்லாம் இந்தக் காலத்துல...நாம ஊருக்குப் போல் எல்லாத்தையும் வச்சக்கலாமா...''

''போடா போ...அப்புறம், இதுல ஏதோ சூது இருக்குன்னு பொண்ணு வீட்டுல நினைப்பாங்க...சமர்த்துப் பிள்ளையா, லட்சணமா, சொன்னதைக் கேட்டா போதும்.''

பெரிய பண்ணை வீட்டிலிருந்து—தேக்கு மரக் கட்டில் —நாலுபேர் படுக்கலாம்— அத்தனை அகலமாய், தலை மாட்டிலும், கால் மாட்டிலும் முகம் பார்க்கும்கண்ணாடி பொருத்தி—வந்து சேர்ந்தது...

அதன் மீது பட்டுப்பாயைத் விரித்து,ஏதோ பெயருக்கு கொஞ்சம் மல்லிகையைத் தூவியிருந்தார்கள். இதற்கு மேல் எதிர்பார்க்கவும் முடியாது. ஸ்ரீதர் எதிர்பார்க்கவும் இல்லை...

அவன் எதிர்பார்த்ததெல்லாம் யமுனாவைத்தான்... கட்டிலுக்கும், பாய்க்கும் ரொம்பவும் முரணாக இருந்தாலும், அதுவே, பரம சௌகரியமாய் இருப்பது போல— ஸ்ரீதருக்குத் தோன்றுகிறது...

யமுனா...

இவளுக்கு இந்த விவகாரத்தைப் பற்றி எந்த அளவுக்குத் தெரியும்...

'தெரியாதென்றால்' நாசூக்காய், மிருதுவாய், சொல்லித் தர வேண்டும்...

MithraVintha

"முதலாவது—அவனுடன் மனம் விட்டுப் பேச வேண்டும்... ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொண்ட பின்தான் இதெல்லாம்..."

யமுனா, உள்ளே நுழைந்து, கதவைத் தாழிட்டுக் கொண்டு, கட்டிலருகில் வந்த போது—அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறான் அவன்...

அவள், இயந்திர மனுஷி போல, பாலை, அவனிடம் நீட்டுகிறாள்.

"பாலைக் குடிங்க..."

"இருக்கட்டும்—நீ இப்படி உட்காரு..."

அவன், அவளது கரத்தைப் பிடிக்க, அவள் ஏதோ நல்ல பாம்பு தீண்டியது போல, கையை உதறிக் கொள்கிறாள்...

நெஞ்சுக்குள், யாரோ நெருப்புத் துண்டை வைத்தாற் போலிருக்கிறது ஸ்ரீதருக்கு...

"யமுனா..."

"......"

"உன்னைத்தானே...இங்கே பாரேன்...யமுனா..."

அவள், திரும்பிப் பார்க்காமல், நின்றபடியே முகத்தை மூடிக் கொண்டு அழுகிறாள்...

அவன், அவளை இழுத்து, கட்டிலில் அமர்த்த, சட்டென ஏறிட்டுப் பார்த்த அந்தக் கண்களில்தான் எத்தனை சிவப்பு...

"இங்கே பாருங்க...எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமேயில்லே!"

"என்னது..."



"ஆமா...கடைசி மட்டும் எங்க சித்தப்பா கிட்ட சொல்லிச்சேன்...பிடிவாதமா முடிச்சிட்டாரு..."

"என்—என்னைப் பிடிக்கலையா யமுனா?"

அவன், இந்தக் கேள்வியைக் கேட்பதற்குள் என்ன பாடு நொறுங்குகிறான்...

"உங்களையின்னு இல்லே...எந்த ஆம்பிளையுமே எனக்குப் பிடிக்கலே..."

"அதான் என்னு கேட்கறேன்..."

"ஒரு ஆம்பிளை கிட்ட உடம்பு, மனசு ரெண்டையும் பறி கொடுத்தவளாலே, எப்படி, வேற ஆம்பிளை யோடக் குடித்தனம் செய்ய முடியும்..."

ஸ்ரீதருக்கு கண்களை இருட்டிக் கொண்டு வருகிறது. இது என்ன...இவள் என்னென்னவோ சொல்கிறாள்...!

"அடப் பாவிகளா...ஏமாத்தறதுக்கு உங்களுக்கு வேற ஆள்தானா கிடைக்கலே...இதை எப்படி நான் வெளியிலே சொல்வேன் ஐயோ, அம்மா...பிள்ளைக்கு கல்யாணம் செஞ்சுப் பார்க்கணும்னு ஆசை ஆசையா பொண்ணு பார்த்து முடிச்சியே...இப், இவ, என்னமோ சொல்றாளே...என்னன்னே புரியல்லையே..."

அவன், உடனேயே கட்டிலிலிருந்து எழுந்து அறைக் கதவைத் திறக்கப் போக, யமுனாவின் மெல்லிய விசும்பலோடு கூடிய குரல், அவன் கால்களைக் கட்டிப் போடுகிறது.

"இங்கே பாருங்க..."

"என்ன..."

"விஷயம் வெளியிலே தெரிய வேணாம். இதை நான் உங்க கிட்ட சொல்லிட்டேன்னு தெரிஞ்சதுன்னா, என் சித்தப்பா என்னைக் கொன்னுப் போட்டுடுவாரு..."

MithraVintha

[illegible]

''இதை முன்னாலேயே சொல்லித் தொலைக்கறதுக் கென்ன...''

இதற்கு என்ன பதிலைச் சொல்றது என்றே தெரியா மல் [illegible] கேள்விக்கு, விடை தெரியாமல் விழிக்கும் சிறுமி போல அவள் விழிக்கிறாள்.

''கேட்கிறேனில்ல...காது செவிடா?''

இப்படி அதட்டிய பிறகுதான், நான் குரலை உயர்த்தியிருக்கக் கூடாதோ என்று தோன்றுகிறது அவனுக்கு.

அவள், அப்படியே கட்டிலில் முழங்காலைக் கட்டிக் கொண்டு அமருகிறாள்...

''நான், ஒரு வாரமாவே, அவர் வந்து என்னை அழைச்சிட்டுப் போவாருன்னு காத்துட்டிருந்தேன்...நேத்து ராத்திரி...இல்லே, இன்னிக்கு விடிகாலையில கண்டிப்பா வந்திடுவாருன்னு...''

''ஆமா...யார் அவர்''...

''......''

''சரி எத்தனை நாளா இந்த விவகாரம்...''

'நான் அவங்க வீட்டுலே வேலைக்கு சேர்ந்தப்ப எனக்கு வயசு எட்டு...பத்து வருஷமா வேலை செஞ்சிருக் கேன்...பதினஞ்சு வயசுலேருந்து பழக்கம்...அவர்தான் சொல்லியிருக்காரு...யார் என்ன தடுத்தாலும், உங்க சித்தப்பா, உன்னை எந்த சீமையில் கொண்டுபோய் வச்சாலும், நான் வந்து உன்னைக் கடத்திட்டுப் போய் தாலி கட்டிடுவேன்னு...''



அவள், கொஞ்சம் பெரிய தொனியிலேயே அழ ஆரம் பிக்கிறாள்.

ஸ்ரீகருக்கு, அவளது கண்களைத் துடைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் போல, கைகள் தவித்தாலும் தன்னெதிரே இருப்பவள், வேறொருவனுக்குச் சொந்தம் என்கிற நினைப்பே அவனுள்ளத்தை மரவட்டையாய் சுருங்கச் செய்...

அவன், அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

''இப்ப என்ன செய்யப் போறே யமுனா...''

''என்னை, உங்களுக்குப் பிடிக்கலையின்னு சொல் லிடுங்களேன்.''

''என்னை விடப் பைத்தியக்காரன் பூலோகத்துலேயே கிடையாதுன்னு எல்லாரும் தீர்மானம் செஞ்சுடுவாங்க.''

''ஒரு வேளை, அவர் நாளைக்குக் காலையில கூட வரலாம்...''

அவளது குழந்தைத் தனமான பேச்சைக் கேட்டு, அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை அவனுக்கு.

நிஜமாகவே இவள், சுய புத்தியுடன்தான் பேசு கிறாளா...

'நாளைக்கு வருவானாமே...'

'வரல்லையின்னா...'

—இதை அவன் வாய் விட்டுக் கேட்டபோது அவள், பிழியப் பிழிய அழுகிறாள்.

''அவர் அந்த மாதிரியெல்லாம் செய்யமாட்டார்... கண்டிப்பா வருவாரு...வரல்லையின்னா, அவரோடத் திட்டம் வீட்டுக்குத் தெரிஞ்சு போயிடுச்சுன்னு அர்த்தம்...

MithraVintha

ஐயய்யோ...அப்புறம் என் கதி...என்னை, உங்க கூட கூட்டிட்டுப் போயிடுவீங்க இல்லே...''

அவள், அவனெதிரில் கட்டிலில் இரு கைகளையும் ஊன்றியபடி, ஒரு குழந்தைக்கு ஆறுதல் சொல்வது போலச் சொல்கிறாள்...

''உன் இஷ்டம் எப்படியோ...அப்படி யமுனா... விட்டுட்டு போயிடட்டுமா...''

அவன், திகிலுடன், 'வேண்டா'மெனத் தலையசைக்கிறான்.

''இங்கே விட்டா, எங்க சித்தியும் சித்தப்பாவும் எசிலே என்னைக் கொன்னுடுவாங்க...''

''சரி...இப்ப தூங்கு யமுனா...பொழுது விடியட்டும் பார்க்கலாம்...''

அவள், கட்டிலிலிருந்த ஒரு பாயை உதறி, தரையில் போட்டுக் கொண்டு படுக்கிறாள்.

## 2

'விடியுமா' வெனக் காத்திருக்கிறாள் யமுனா. பொழுது மட்டுமல்ல தனக்கும்தான்.

பரசுராம் ஏமாற்றுவான் என்று அவள், கொஞ்சம் கூட நினைக்கவில்லை. அவ்வளவு ஏன்...நினைத்துப் பார்க்கவும் விரும்பவில்லை.

அவளைத் தொட்ட, அவளது அழகை இம்மி பிசகாமல் வர்ணித்த, ஆராதித்த ஒரே ஆள்—பரசுராம்தான்...



எட்டு வயசில் அவள் சம்பூரணத்தம்மாள் வீட்டு எடுபிடி ஆளாகப் போன போது—சம்பூரணத்தின் மூத்த மகனான பரசுராமிற்கு பதினைந்து வயசு... நடுவில் சியாமளா...இவளை விடவும் மூன்று வயசு பெரியவள். கடைக்குட்டி ராஜாவுக்கு நாலே வயசு...

அவள் முக்கியமாய் குழந்தையைப் பார்த்துக்கொள்ள வேண்டும். சம்பூரணத்தின் மாமனார், பூஜைக்கு அமரும் வேளையில் 'இது எங்கே, அது எங்கே' என்று கேட்கும் முன் எடுத்து வைக்க வேண்டும். சந்தனம் அரைத்து வைத்து, பூப்பறித்து வைத்து, விளக்கேற்றி, இந்தக் காரியங்களை எல்லாம் ஓடி ஓடிச் செய்யவேண்டும்.

அதற்குப் பின், குழந்தை ராஜாவுக்கு சம்பூர்ணம் பிசைந்து தரும் பருப்பு சாதத்தை, காக்கா, குருவி முதலிய சகல ஜீவராசிகளையும் காட்டி ஊட்ட வேண்டும். அவன், முகத்திலேயே 'த்தூ'வென சோற்றைத் துப்பினால், சிரித்தபடி சகித்துக் கொள்ள வேண்டும்...

யமுனாவிற்கு, பத்து வயசான போது, வேலைகளும் சற்று அதிகமாகின...ஏற்கனவே சியாமளாவும், பரசுவும் அவளை ஒரு யூனிபார்மை இஸ்திரி செய்து வாங்கி வரச் சொல்லி பத்து தடவை விரட்டுவார்கள். இப்பொழுது ஸ்கூலே வேண்டாமென அடம் பிடிக்கும் ராஜாவை இடுப்பில் சுமந்து கொண்டு போய் பள்ளியில் விட வேண்டும்...மறுபடியும் பகலுக்குப் போய் அழைத்து வர வேண்டும்...நடுவில் வீட்டுக்காரியங்கள் வேறு...அரிசி, உளுந்து ஊறப்போட்டால் அரைத்து எடுத்து வைக்க வேண்டும். காய் கறி நறுக்கி, சமையற்காரிக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். நடுவில், சம்பூர்ணம் கர்ப்பப் பையில் ஏதோ கட்டி என்று ஆபரேஷன் செய்துக் கொண்டு படுக்கையில் கிடந்தபோது, முழுக்க, முழுக்க வீட்டு நிர்வாகமே இவள் கையில்தான்...



Mithra Vintha

யமுனாவிற்கு பதின்மூன்று வயசாகி திரு திருவென கன்னாடி வாழை மாதிரி நின்றபோது, சம்பூர்ணம் பெருமூச்செறிந்தாள்.

"இதுக்கு மாத்திரம் எங்கேயிருந்துடியம்மா இத்தனை வளர்ச்சி வந்தது..."

—இப்படி தன் தாயாரிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள்.

அது என்னமோ நிஜம்தான்.

கரண்டி கரண்டியாய் வெண்ணெயும், தயிருமாய், [illegible] வைத்துத் திணித்தாலும், ஆன வயசுக்கு யமுனா, கருவேப்பிலை குச்சி மாதிரிதான் இருந்தாள்...

அதனாலேயே இவனைக் கண்டால் யமுனாவிற்கு பற்றிக் கொண்டு வரும்—தனது சிநேகிதிகளின் எதிரில் அவனைக் கிள்ளிக் கொட்டுவாள்.

"அத்தான்டை போடா... உன்னைக் கூப்பிட்டா [illegible] இங்கே வரக்கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்—"

"[illegible] வளர்த்திருக்கே தவிர வெறும் [illegible] ஒரு [illegible] [illegible] போயிடுச்சு..."

"[illegible] போட்டுக்காதேயின்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது—அம்மா இங்கே வந்து, அவனைப் பாரேன்... [illegible] மாதிரி [illegible] [illegible]—"

யமுனா எத்தனைக்கெத்தனை இவனைப் பார்த்து [illegible] ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தாளோ, பரசு, மௌன மௌனமாக இவளிடம் இதமாய் பேச—ஆரம்பித்தான்.



தனது நண்பர்கள் வந்திருக்கையில் அடிக்கடி அவனிடம் தண்ணீரோ, குளிர்பானமோ கொண்டு வரச் சொல்லி ஏவினான்.

"சட்டையில் என்னடி கரியா..."

—இப்படிக் கேட்டு, சிநேகிதர்கள் எதிரேயே அவனைத் தொட்டு சட்டையிலுள்ள கரியைத் துடைத்து விடுவான்.

சாக்லெட்டோ, ஐஸ்க்ரீமோ—இவனுக்கென்று தனியாக எடுத்து வைத்து, ரகசியமாய் அழைத்துக் கொடுத்தான்.

"நெத்திப் பொட்டை சரியா வச்சுக்கோடி..."

—இப்படி அவனது அலங்காரத்தைக் கவனமாய் கவனித்துத் திருத்தினான்...

பதின்மூன்று வயசு முடியும் தறுவாயில் ஒரு நாள் சம்பூர்ணம், அவனை ஒதுங்கி உட்காரச் சொன்னாள்.

'தரித்திரம், தரித்திரம்' என்று தலையில் அடித்துக் கொண்டே, சமையற்காரியை விட்டு ஆரத்தியை சுற்றிக் கொட்டச் சொன்னாள்.

அன்றிரவு குழந்தைகள் தூங்கிய பிறகு, வீட்டுக் கூடத்தில் அம்மாவின் படுக்கையறையில் சம்பூர்ணம், அவள் கணவருடன் கலந்து ஆலோசித்தாள்.

"இந்தா. இதுக்கு மேல, அந்தப் பொண்ணை இங்கே வச்சிருக்கறது சரியில்லே. நாளைக்கு ஏதாவது ஆச்சுன்னா அவளைச் சேர்த்த மனுஷங்க கிட்ட நாமதானே பதில் சொல்லியாகணும்..."

"நல்லாயிருக்கு நீங்க சொல்றது. இப்ப நம்ம வீட்டுல யமுனா இல்லையா... அவளை மாதிரி இவளும் இருந்துட்டுப் போறா...என்னா [illegible]"

MithraVintha

துரும்பைத் தூக்கி, அந்தண்டை போட முடியாது... அவ்வளவுதான் சொல்லிட்டேன்...''

''எதுக்கும் அவ சித்தப்பனுக்கு ஒரு லெட்டர் எழுதி கேட்டுடறது நல்லதுன்னு தோணறது...''

''போதும். அசடு மாதிரிப் பேசாதீங்க. இதையெல்லாம் ஆம்பிள்ளைங்களுக்கா எழுதுவாங்க... நானே, நாளைக்கு அவ சித்திக்கு ஒரு லெட்டர் எழுதிப் போடறேன்...''

சம்பூர்ணம் என்ன எழுதிப் போட்டாளோ... அதற்கு இந்த யமுனாவின் சித்தி என்ன பதிலை எழுதிப் போட்டாளோ... அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்...

பதினாறு, பதினைந்து வயசில் பார்க்கிறவர்கள் கண்ணைக் கட்டி நிறுத்துவது போல இருந்தாள் யமுனா.

ஒரேயொரு முறை—

முதல் முறை கூட...

பரசுராமன், அவள் காபி, மிக நன்றாகப் போட்டிருப்பதாகச் சொல்லி, கன்னத்தில் முத்தமிட்டான்.

அப்போது அவன், இன்ஜினீயரிங் காலேஜில் கடைசி வருடப் படிப்பை படித்துக் கொண்டிருந்தான்.

யமுனாவுக்கு அவன் முத்தமிட்டதில் கிறுகிறுப்பை விடவும், சொல்லொணாதப் பெருமைதான் மிகுந்திருந்தது...

அதற்கடுத்து... அதற்கும் அடுத்து... அவள், காபி கோப்பையுடனோ, டிபன் தட்டுடனோ, அவனைத் தேடி மாடியறைக்குப் போகும் போதெல்லாம். அவன் பக்கம் பக்கமாய் வசனம் படித்தான்.

''அம்மாடி... உன் கண்ணு எவ்வளவு பெரிச யமுனா...''



''கன்னத்துல ஒரு பரு கூட இல்லே... என்ன க்ரீம் தடவறே... சியாமளா கன்னத்துல மாத்திரம் அத்தனை பரு இருக்கே...''

''ஏய்... கிட்ட வாயேன்... உனக்கு ஒரு ரகசியம் சொல்றேன்...''

யமுனாவின் மிகச் சாதாரணமான வாழ்க்கையில் திடீரென, எல்லா சௌந்தர்யங்களும் சேர்ந்தாற் போல...

இப்பொழுதெல்லாம், சம்பூர்ணம் திட்டினால்கூட யமுனா, புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டாள்.

''இங்கே பாரு யமுனா... படிப்பு முடிஞ்சு வேலை கிடைச்சவுடனே, அப்பா அம்மா கிட்ட ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போடப் போறேன்...''

''என்னன்னு...''

''கல்யாணம்னு பண்ணிக்கறதானா, நான் யமுனாவைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு...''

'ஐய்யோ!''

''என்ன... என்ன ஐயோ... இதுல என்ன தப்பு இருக்கு சொல்லு. உனக்கென்ன குறைச்சல்... உன்னைவிட அழகான நாட்டுப் பொண்ணு எங்க அம்மாவுக்குக் கிடைச்சிடுவாளா... இல்லே, உனக்குத்தான் காரியம் செய்யற சமர்த்துப் போறாதா... இதை விட ஒசத்தியான பொண்டாட்டி தபஸ் கிடந்தாலும் எனக்குக் கிடைக்காதுப்பா...''

''சீ சீ...''

சரியாய் பதினாறாவது வயசு முடிந்து—பதினேழாவது தொடக்கத்தில் அந்தச் சம்பவம் நடந்தது...

மூன்று மாதங்களாய் வெளியே உட்கார்ந்து தன்னிடம் வசவு வாங்காமல் சமர்த்தாக வளைய வந்த

MithraVintha

யமுனாவைப் பார்க்கப் பார்க்க சம்பூர்ணத்துக்குள் வெளியே சொல்ல முடியாத தவிப்பு.

'எப்படி...எப்படி கேட்பது...'

சியாமளா வேறு தாயின் கன்னத்தில் இடிக்காதக் குறையாகக் குத்திக் காட்டினாள்.

சமையற்காரம்மாவுக்கு நொடிக்கு நூறுதடவை மாடி ஏற முடியாததாலே, இவளை, அனுப்பினா... இவ மேலே போனா, இதே இவளை இறங்கி வர்ற. குறைஞ்சது ஒரு மணி ஆகுது... முந்தா நாள் ராத்திரி பாட்டி எதுக்கோ இவளைக் கூப்பிட்டா... நாலஞ்சு தடவை கூப்பிட்டும் இவ வர்றதாலே, நானே 'யமுனா'ன்னு கத்தினேன்... மாடியிலேருந்து தபதபன்னு இறங்கி வர்றா. ராத்திரி ரெண்டு மணிக்கு, இவளுக்கு மாடியில என்ன வேலை...'

''கேட்க வேண்டியதுதானே...''

''கேட்டேனே... கேட்காம விடுவேனா... தலையும் புடவையும் கலைஞ்சிருந்ததை நீ பார்க்க...'

''சரி. சரி...நீ என்ன கேட்ட, அவ என்ன சொன்னா... அதை மட்டும் சொல்லு... போதும்...''

சம்பூர்ணம் எரிந்து விழுந்தாள்.

பதிலுக்கு சியாமளாவும் முகத்தைச் சடுத்துக் கொண்டாள்.

''இப்ப என்கிட்ட உன் ஜபர்தஸ்தை எல்லாம் காமி... அங்கே கோட்டை விட்டுரு. இந்த நேரத்துல மாடியில என்னடியின்னு கேட்டேன்... துணியெல்லாம் மொட்டை மாடியில உலர்த்தியிருந்ததே... இடியும் மின்னலுமா மழை வரும்போல இருந்ததாலே எடுத்து, உள்ளே போட்டுட்டு வரப்போனேன்னு சொன்னா...''



அவள் சொல்லதற்கும், யமுனா வயிற்றைப் பிடித்துக் கொண்டு புழக்கடைப் பக்கம் ஓடுவதற்கும் சரியாக இருந்தது...

சம்பூர்ணம், அவள் திரும்பி வரும் வரையில் பல்லைக் கடித்துக் கொண்டு காத்திருந்தாள்...

''என்னடி...''

''நேற்று பஜ்ஜி சாப்பிட்டது, என்னமோ வயித்தைப் புரட்டி புரட்டி...''

''புரட்டும்டி புரட்டாதோ பின்னே.''

அவள், பத்ரகாளி மாதிரி யமுனாவின் நீண்ட தலைப் பின்னலைப் பிடித்து இழுத்து உலுக்கினாள்...

''என்ன நடந்தது. சொல்லு...சொல்லுடீ... இல்லே இந்த வீட்டுல கொலை விழுந்துடும். நான் பழிபாவத்துக்கு ஆளாக மாட்டேன்...''

''ஐயோ விடுங்க...விடுங்க...''

''விடுடி அவளை...''

சம்பூர்ணத்தின் கணவரும், மாமனாரும், ஓடி வந்தார்கள். சம்பூரணத்தின் தாய் மாத்திரம் அத்தனை வயசுக்கு அந்த புத்திசாலித்தனத்தோடு நடந்து கொண்டாள்...

''ரகசியமா விசாரிக்க வேண்டியதை சபைக்குக் கொண்டு வராதேடி...விஷயம் வெளியிலப் பரவினா... 'கொல்'லுனு சிரிச்சுப் போயிடும்...உள்ளே இழுத்துட்டுப் போய் கேளு...''

சம்பூர்ணம், யமுனாவைப் பிடித்தபடி விடாமல் தன் அறைக்கு இழுத்துக் கொண்டுபோய் தாழ் போட்டுக் கொண்டாள்...

Mithra Vintha

யமுனா, பலிபீடத்தில் நிற்பது போல நின்றாள்...

''என்ன நடந்தது...இதெல்லாம் எத்தனை நாளா ஏண்டி, அவன்தான் கூப்பிட்டான்னா, நீயும் சரிதான்னு போனியா? ஒரு தராதரம் தெரிய வேண்டாம்?''

''அவர்தான்... அவர்தாம்மா...என்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு...''

சம்பூர்ணம், அவள் தலையை அப்படியே கொண்டு போய், 'ணக்'கென்று, சுவரில் இடித்தாள்...

''உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னானா...நீயும் சரிதான், கிடைச்சது லாட்டரியின்னு போனியா...நகையும் நட்டும், வைரத்தோடும், பட்டுப் புடவையுமா இடுப்புல சாவி கொத்து குலுங்க குலுங்க— இந்த வீட்டை ஆட்சி செய்யலாம்னு நினைச்சயாடி பாவி...''

''ஐயய்யோ...சத்தியமா அப்படியெல்லாம் ஆசை இல்லே... உங்க பிள்ளையத் தவிர, நான் வேற யாரையும், மனசால நினைச்சக்கூட...''

''ஓடுடி...ஓடிடியின்னா...இனிமே இந்த வீட்டுல ஒரு க்ஷணம் கூட இருக்கப்படாது...''

அந்த அம்மாள், காட்டுக் கத்தலாய் கத்த அவளது கணவர்தான் அவளை அடக்கி வைத்தார்.

'இந்தா, நீ பாட்டுக்கு இவளை இந்த நிலைமையில வெளியில துரத்தி விட்டா— இன்னும் ஏழு மாசத்துல இந்தாங்க, உங்க பேரன்னு ஒண்ணைக் கொண்டு வந்து மடியில போடுவா...முதல்லே, இவளை 'நர்ஸிங் ஹோம்'லே அட்மிட் பண்ணு. வயித்துல இருக்கற சனியனைக் கலை அதுக்கு அப்புறம் ஒரு மாசம் கழிச்சு, அவ சித்தப்பனுக்கு லெட்டர் போட்டு, இவளை வந்து



அழைச்சுட்டுப் போகச் சொல்லு... அதுவரைக்கும், யார் எது கேட்டாலும், அவ வயித்துல அல்ஸர்னு சொல்லு...''

''............'

'மொதல்லே, வீட்டு வேலைக்காரிக்கும், சமையற்காரிக்கும் விஷயம் தெரியாமப் பாத்துக்க...போதும்...''

அடுத்த நாள்—மாடியில் பரசுராமனுக்கும், அவன் தந்தைக்கும், தாத்தாவுக்கும் குருக்ஷேத்திர யுத்தமே நடந்தது...

அவன் ஏதோ சொல்ல, பெற்றவர் பளீரென அறைந்தது யமுனாவின் செவிகளில் விழுந்தது...

நர்சிங்ஹோமுக்குப் போனதும், கருவைக் கலைத்ததும், எல்லாம் நிமிஷமாய் நடந்து விட்டது...

சித்தி, சித்தப்பாவிடம், இந்த காதல் விவகாரத்தைச் சொன்ன சம்பூர்ணம், என்ன காரணத்தினாலோ—அந்த கருச்சிதைவைப்பற்றி சொல்லவே இல்லை...

அவளிடமும் எச்சரித்தனர்...

''இந்தாடி...அந்த அசிங்கத்தை வெளியில சொல்லிட்டுத் திரியாதே... உனக்குத்தான் அவமானம்...''

யமுனாவிற்கு, உண்மையிலேயே திகில் கழுத்தை இறுகப் பிடித்தது.

சித்தப்பா, தான் எத்தனை மானஸ்தர் என்பதை, அந்தப் பணக்காரர்கள் முன் காட்ட வேண்டுமென்பதற்காகவே—யமுனாவை, தரதரவெனப் பிடித்திழுத்து, முதுகிலும் கன்னத்திலும் சரமாரியாக அடித்தார்...

சம்பூர்ணம், பெரிய மனுஷியாய், லட்சணமாய் அப்போது தடுத்தாள்:

''வேண்டாம். வேண்டாம்...எங்க கண் முன்னாடி எதையும் செய்யாதீங்க...எனக்கு தலை சுத்தும்...ஆனா ஒண்ணு...என் பிள்ளைக்கு ஒண்ணு தெரியாது... பச்சை

MithraVintha

குழந்தை மாதிரி...தெருவுல நடந்தா, குனிஞ்ச தலைய நிமிர்த்தமாட்டான்னு பேரு...அத்தனையையும் இவ தவிடு பொடியாக்கிட்டான்னா—இவ எப்பேர்பட்டவளா இருக்கணும்...''

'ஊருக்குப் போனதும் தொலைச்சிடறேன்.''

''அதெல்லாம் அரக்கத்தனமா எதுவும் பேசாதீங்க... அவனுக்கு கல்யாண ஆசை வந்தாச்சு. ஏதோ, ரெண்டாந் தாரமோ, மூணாந்தாரமோ பார்த்து, கையைக் காட்டி விட்டுடுங்க...நான் இவனுக்காக பத்தாயிரம் ரூபா தரேன்...யார் தருவாங்க...நான் தரேன்...எதுக்காக... திருப்பியும் என் பிள்ளையோட மனசை கலைக்காம இருக்கறதுக்காக...

ஊர் திரும்பும் யமுனாவிற்கு பரசுராம் கடைசி நிமிஷம்வரை சின்னதாய் ஒரு ஆறுதல் வார்த்தை கூட சொல்லவில்லை. சொல்லவிடவில்லை இவர்கள்...

இவனாக அவன் வேலை பார்க்கும் நிறுவனத்தின் விலாசத்தை எடுத்துக்கொண்டு வந்ததுதான்...

நாலைந்து கடிதங்களுக்கு ஒருமுறை அவனிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது. அவைகளில்தான் அவன் எப்படியும் அவளை, தன் மனைவியாக அழைத்து வந்து விடுவதாகவும் கொஞ்சநாள் பொறுத்துக் கொள்ளும் படியும் எழுதியிருந்தான்.

இந்தப் அப்பாவிப்பெண்ணும் அதைநம்பிக்கொண்டு, ஒவ்வொரு வானாகத் தட்டிக் கழித்துக் கொண்டு, சிற்றப்பனிடம் செருப்படி வாங்கிக் கொண்டு...

கடைசியில் ஸ்ரீதர் வந்து சேர்ந்தான்...

தனது வாழ்க்கைக்கு, மிகப் பிரியமான தோழியாய் இவளை ஏற்றுக் கொள்ள...



பொழுது ஒரு பக்கம் புலரும்முன்பே—பின்னை விட்டி வர் கிளம்புவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் தொடங்கி விட்டது.

யமுனாவின் சித்தப்பா வண்டி எடுத்துவரக் கிளம்பு கிறார். பெண்கள் கூட்டம் கட்டுச்சோற்றுக் கூடையை யும், பூசணிக்காயும், பறங்கிக்காயுமாய் ஒரு கூடை காய் கறி வகைகளை அங்கே கொண்டு வந்து வைக்கிறது.

சித்திக்காரி ஒரு உபசாரத்துக்கு கூட ஸ்ரீதர்டம் அப்பப்ப எங்க பொண்ணை அழைச்சுட்டு வாங்க என்று கூறவில்லை.

இதில் ஜனகத்துக்கும் கூட கொஞ்சம் வருத்தம்தான். ''இப்ப இவங்க வான்னு கூப்பிட்டதாலே, என் மகன் வடக்கேயிருந்து இத்தனை தூரம் செலவழிச்சுட்டு வரப் போறதில்லை. ஒரு மரியாதைக்காக கூப்பிட வேண் டாமா?''

அவன், தனது தூரத்து உறவுக்காரப் பெண்மணியிடம் சொல்லிச் சொல்லி மாய்கிறாள்.

வாசலில் மாட்டுவண்டிகள் வந்து நின்றுவிட்டது. ஸ்ரீதர், யமுனாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக் கிறான்.

''பெரியவங்களை எல்லாம் வணங்கிட்டு கிளம்பும்மா யமுனா...

ஜனகம்தான் சொல்கிறாள்.

யமுனா, சித்தப்பாவை வணங்கி எழும்போது, அவர், முகத்தை இறக்கமாக வைத்துக்கொண்டு சொல்கிறார்.

''போற எடத்துல நல்ல பேர் எடு. குடும்ப மானத் தைக் காப்பாத்து. அதுபோதும்...''

வண்டியில் ஏறிய ஸ்ரீதர், யமுனா ஏறுவதற்கு உதவி யாக, தனது வலக்கரத்தை நீட்ட—

MithraVintha

அவள், அந்தச் சரத்தை ஒருகணம் உற்றுப்பார்த்து விட்டு, வண்டியின் இரும்புகிராதியைப் பிடித்துக்கொண்டு தானே ஏறுகிறாள்...

வண்டி, ரயில்வே ஸ்டேஷன் போகும் வரையில் அவளது கண்கள் சல்லடை போட்டு சலிப்பதுபோல, தெருவில் வரும் மனிதர்களை சலித்துக் கொண்டேயிருக்க...

ஸ்ரீதருக்கு, அவளைப் பார்க்கையிலேயே பரிதாபமாக இருக்கிறது...

இரவு முழுக்க, அவள் தூங்கவில்லை என்பது அவனுக்குத் தெரியும், ஏனெனில், அவனும் உறக்கம் வராமல் புரண்டுகொண்டேதான் இருந்தான்...

கண்ணெதிரே இருக்கும் சொத்து கோவில்—கோவில் சொத்தைப் போல பார்த்துக் கொண்டே இருக்கலாமே தவிர, அனுபவிக்க பாத்தியதை கிடையாது...

அவனுக்கு, முன் பின் பார்த்திராத, பெயர் கூடத்தெரியாத, அந்த எவனோ ஒருத்தன் மீதுதான் எரிச்சல் பற்றிக் கொண்டு வருகிறது.

'கடங்கார...பழிகாரா உனக்காக இவ, எவ்வளவு ஏங்கறா...வந்து தொலைக்காம எங்கே, என்னத்தைடா புரட்டிட்டிருக்கே...''

ஜனகத்துக்கு இந்த கவலையெல்லாம் இல்லை அவள் தனது அழகான மருமகளைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தபடி உட்கார்ந்திருக்கிறாள்...

'நல்லாத்தான் இருக்கா. குத்து விளக்குச் சுடர் மாதிரி...'

அவள், நடுங்கும் குரலில் மகனிடம் சொல்கிறாள் :

''இந்தாடா ஊருக்குப்போனதும் முதல்லே பெருமாள் கோவில்லே அபிஷேகத்துக்குக் கொடுக்கணும்...''



''ஆகட்டும்''



''இன்னிக்கு ராவு, ரயில்லே போயிடும். நாளைக்கு மூணாம நாளு...நம்ம குடும்ப வழக்கப்படி மூணாம் நாளு பொண்ணைத் தனியாகத்தான் படுக்க வைக்கணும்... நாலாம நாள் ராத்திரிதான், நம்ம வீட்டுல படுக்கை ஜோடனை யெல்லாம் பண்ணணும்... போனதும் பூக்கடைக்காரன் முத்தப்பாவைக் கூப்பிட்டு, அச்சாரம் கொடுத்திடு என்ன...''

இதைச் சொல்லிவிட்டு, அந்த வயசிலும் குறும்பு போகாத கிழவி, மருமகளை ஓரக்கண்ணால் பார்க்கிறாள்.

நேற்றைய நினைப்பு—இன்றைக்கு இவள் முகத்தில் சிவப்பைக் குழைத்துப் பூச வேண்டுமே...

யமுனா — கிழவியின் எண்ணத்தைப் புரிந்து கொண்டாற்போல, வண்டியினுள் திரும்பிப் பார்க்காமல் வெளிப்பக்கமே முகத்தைத் திருப்பிக் கொண்டு வருகிறாள்...

மகன், பதிலேதும் சொல்லாததைக் கண்டு தாய்க்கு சிரிப்பு பொங்கிக் கொண்டு வருகிறது.

''நான் ஒரு மக்குடா. எதை உன்கிட்ட சொல்றது, எதை நானே கவனிச்சுக்கணும்கறது கூட சமயத்துல மறந்துப்போயிடறது...வயசாச்சு இல்லையோ...பூக்கடை முத்தப்பாவுக்கு நானே, ஆளனுப்பி சொல்லி விடறேன். நீ பெருமாள் கோவில் அபிஷேகத்திற்கு மாத்திரம் ஏற்பாடு பண்ணு போறும். எப்ப நீ, ஊருக்கு கிளம்பணும்?''

''நீ என்ன நீ...நாம மூணு பேரும் கிளம்பணும். இன்னும் ஒரு வாரத்துல...''

MithraVintha

அவன், அவளது முகத்தை ஜாடையாகப் பார்க்கிறான்...பெரிய விழிகளில் எப்பொழுதும் நிரந்தரமான நீர் பளபளப்பு......

'இவளை என்ன செய்யப் போகிறோம்...'

மிகப் பெரிய கேள்விக் குறியொன்று நெஞ்சில் எழுகிறது.

# 3

கிராமத்தில் இருந்த...நாலைந்து நாட்களும் ஜானகி இறக்கைக் கட்டிக் கொள்ளாத குறையாகத்தான் பறந்தாள்.

சின்ன வீடுதான் என்றாலும் சொந்த வீடு. அதை அந்த ஊர் மளிகைக் கடை முதலாளிக்கு நாலாயிரம் ரொக்கத்துக்கு மனமே வராமல் எழுதிக் கொடுக்கிறாள்.

தனக்கென்று சில தட்டு முட்டு சாமான்கள்; பண்டம் பாத்திரங்கள்; ஸ்ரீதரின் தந்தையுடைய புகை படிந்த போட்டோ ஒன்று...

மற்றபடி வேறு அதிகமான சாமான்களைக் கட்டிச் சுமக்க வேண்டாமென, ஸ்ரீதர் சொல்லி விட்டதால் ஓட்டை உடைசல்களை எல்லாம் வேண்டிய மனிதர்களுக்கு இலவசமாகக் கொடுத்துவிட்டு ஜானகி வெளியேறினாள்.

மகன், மருமகளுடன் செல்வதில் விருப்பம் தானென்றாலும் இத்தனை நாளும் பிறந்து, வளர்ந்து, வாழ்க்கைப்பட்டு, உயிரோடு கலந்த மண்ணை பிரிய மனசுக்குத்தான்



வரவில்லை...கண்ணீர் கொப்பளிக்க, ஒவ்வொருவரிடமும் சொல்லிக் கொண்டு பிரிந்தாள்...

கிராமத்திலிருந்து சென்னைக்கு வந்த போது...யமுனாவின் முகத்தில் இனம் புரியாத பரபரப்பு ஒட்டியது...

ஒருநாள் அவர் வீட்டுக்கு வந்திருந்தார்...

அவள் நினைப்பை அப்படியே படம் பிடித்துப் பார்த்தவன் போல ஸ்ரீதர் கேட்கிறான்:

"உன்னோட அப்பா வருவார்னு எதிர்பார்க்கிறியா யமுனா..."

"..........."

"எதுவானாலும் நம்மகிட்ட சொல்லு. அம்மா சாமானைப் பார்த்துட்டு. வண்டியிலே ஏற்றி கட்டும். நாம் ரெண்டுபேரும் வேணுமானா இப்படி கொஞ்ச தூரம் போய் பார்த்துட்டு வரலாமா?"

சரியென்று போகச் சொல்லிவிட்டாள் ஜானகி.

"அம்மா...நீ இங்கேயே உட்கார்ந்திரு நான் யமுனாவையும் அழைச்சுட்டு, இப்படி காலாற நடந்துட்டு வரேன்..."

செல்லேன்."

ஜானகி முகம் முழுக்கச் சிரிப்புடன், இருவரையும் வழியனுப்பி வைத்தாள்.

அப்பொழுதுதான், அவன் யமுனாவிடம் மனம்விட்டு பேசவே முடிகிறது.

"இங்கே பாரு யமுனா..."

"உம்"...

"இப்ப, இந்த நிமிஷம், உன்னோட அப்பாவைப் பார்த்தாக் கூட 'டக்'குனு நீ ஓட முடியாது..."

MithraVintha

அவள், அவனை நிமிர்ந்துப் பார்த்து விட்டு தலைக் குனிந்து சொல்கிறாள்.

''ஏதுடா, இப்படிச் சொல்றன்னு தப்பா நினைக்காதே யமுனா. திடீர்னு நீ ஒருத்தனோடப் போயிட்டா எங்க அம்மா தாங்கமாட்டா...வயசாச்சு பாரு...''

''......''

''உனக்கு சம்பந்தமில்லாத எவனோ ஒருத்திக்காக உன்னைக் கஷ்டப்படுத்தறேன்னு நினைச்சா...இது அபிப்ராயம்தான் யமுனா தாலி கட்டினதாலே மட்டும், நீ எனக்கு சொந்தமாயிடமாட்டே. உன் மனசும், உடம்பும் வேற எங்கேயோ வச்சிருக்கு... இப்ப, இந்த நேரத்துல அவர்...அதான் உன்னுடைய...என்ன சொல்றது...அந்த மனுஷர் வந்தா, அவர் கிட்ட, சின்னதா ஒரு உதவி கேட்கப் போறேன்...''

''என்னது?''

''தயவு செஞ்சு ஒரு மாசம், இல்லே ரெண்டு மாசம் பொறுத்துக்கும்படி...நான் உன்னை, விரலாலே தீண்டக் கூட மாட்டேன்...நீ எப்படியிருக்கியோ, அப்படியே உன்னை, உன்னோட அவர் கிட்ட சேர்த்துடறேன்னு சொல்லு...நானும் சொல்றேன்...''

''——''

''ஏதுடா, இப்படிச் சொல்றேனேன்னு இருக்கா...''

''இல்லே...அந்த மாதிரி ஒரு நிலைமையில் நீங்களும் நான் என்ன செய்வீங்க...''

ஸ்ரீதர், நாலைந்து நாட்களுக்குப் பிறகு முதல் தடவையாக இன்றுதான் சிரிக்கிறான்.

''என் கஷ்டம் புரிஞ்சிருக்கு இல்லே...அதுவே போதும் தாங்க்ஸ்...''



இந்த சம்பாஷணைக்குப் பிறகு, இருவரும் காபி ஸ்டாலுக்குப் போய், காபி குடிக்கிறார்கள். ஸ்ரீதர் அம்மாவுக்காக கொஞ்சம் பழம், இன்னும் தங்களது வழிப் பசிக்காக சாப்பாடு பொட்டலம், இலைகளை வாங்கிக் கொள்கிறான்.

''உனக்கு ஏதாவது வேணுமா யமுனா?''

''ஊஹூம்...''

அவனது விழிகள், கூட்டத்தை அலசுவதிலேயே இருக்கிறது...

ரயில் கிளம்பும் வரையில், அவன் ஜன்னல் பக்கமே பார்த்துக் கொண்டு வருகிறான்.

இந்த இரண்டு நாள் பிரயாணத்தில் அதிகமாய் பேசியதே ஜானகம்தான்...

மருமகளிடம் தனது இளமைக் காலங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வருகிறாள்.

அதே சமயத்தில், மகனது பழக்க வழக்கங்களையும், சுபாவத்தையும் வேறு, மருமகளின் மனதில் பதியவைக்க முயற்சிக்கிறாள்.

''இங்கே பாரு...அவன் ரொம்பதான் உருக்கறான். வடக்கே அதுதான் பழக்கம் போல இருக்கு...அம்மா ஊடுச்சா உடம்பு என்னத்துக்கு ஆறது. நீதான் இதை வெல்லாத்தையும் இனிமே கவனிச்சுக்கணும் சொல்லிட்டேன்...''

''என்கிட்ட இருந்த வரைக்கும் தோசைன்னா ஒரு எட்டு சாப்பிடுவான். அடையின்னா ஆறுக்குக் குறையாம சாப்பிடுவான். இப்ப இப்படித்தான், அங்கே இங்கே, வேலையில இருந்து, ஆகாரத்தையே குறைச்சிட்டான்...''



MithraVintha

ஒரு கை சாதத்துக்கு மேல போதும், போதும்னு குப்புற விழுந்து இலையை மறைச்சுக்கறான்.''

ஸ்ரீதருக்கு தர்மசங்கடமாக இருக்கிறது.

''அம்மா...எல்லாத்தையும் இப்பவே சொல்லிட னுமா? கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோயேன்...''

''போறும்டா, வண்டியில வர்றதுக்கு என்ன ரெஸ்ட்? நான் என்ன, இங்கே சமைக்கறேனா...துணி துவைக்க றேனா...என்ன ரெஸ்ட் வேண்டிக் கிடக்கு...''

இதற்கு மேல் அவன் என்ன சொல்வான்? அசடைப் பார்த்து வெறுமையாய் சிரித்து வைக்கிறான்.

இதற்குள் அம்மா, அவர்களைக் தூக்கி வாரிப் போடச் செய்யும்படியான கேள்வியைத் தூக்கிப் போடு கிறாள்.

''ஏன்டாப்பா... அவளுக்கு தூக்கம் வந்து... என்னமோ நான் வேணுமானா அந்தப்பக்கம் வந்து... றேன். நீ இங்கே வந்து உட்காரேன்...அவ வேணுமானா உன் மடியில தலையை வச்சுட்டுப் படுத்துக்கட்டுமே...''

யமுனா அதிர்ந்தே விட்டாள்.

இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் எக்கச்சக்க... மாட்டிக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை அவ... நினைத்தே பார்க்கவில்லையே...

அவன், 'சட்'டென ஜனகத்தின் தளர்ந்த கரங்... பிடித்துக் கொள்கிறான்.

''எனக்கு ஒன்னும் தூக்கம் வரல்லே. பாவம்... நான் ரொம்ப நேரமா உட்கார்ந்துட்டேயிருக்கே... நீங்க, என் மடியில தலையை வச்சிப் படுத்துக்குங்க...''

அவன், ஒரு காலை மடக்கி இன்னொரு ...



தொங்க விட்டு, ஜனகம் படுப்பதற்கு, வசதியாக உட்காரு கிறான்...

ஜனகத்துக்கு இந்த வார்த்தைகள், மழைச் சிந்தலாய் இதயத்துக்குள் விழுந்திருக்க வேண்டும்...

''என் தங்கமே...''

இப்படிச் சொல்லி, யமுனாவின் தாடையை வழித்து தொட்டு முறிக்கிறாள்.

உடனேயே யமுனாவிற்கு, வாய் விட்டு நன்றி சொல்ல வேண்டும் போல இருக்கிறது ஸ்ரீதருக்கு...

அவளோ, எதுவுமே நடவாதவள் போல, தனது மருதோன்றி சிவப்பேறிய விரல்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

அவளுக்கு—தனது திருமணத்துக்குப் பிறகு, தன் வீட்டில் நடந்த இரண்டாவது சோபனம் நினைவுக்கு வருகிறது...

அந்த அறைக்குள் நுழையும் போதே—எத்தனை பயத் துடன், தயக்கத்துடன் நுழைந்தாள் அவள்...

அவன்தான் சொன்னான்;

''இந்தப் பாரு யமுனா...இங்கே வா...''

'......''

''உன்னோட அனுமதியில்லாம, உன்னை நான் தொடமாட்டேன்...''

''......''

''என் மேல நம்பிக்கை இல்லையா?''

''இருக்கு''

''பின்னே என்ன தயக்கம்...''

MithraVintha

"நாளைக்கு அவருக்குத் தெரிஞ்சா..."

"என்ன விஷயம்..."

"நீங்களும் நானும் ஒரே படுக்கையறையில் படுத்தோம்கற விஷயம் அவருக்குத் தெரிஞ்ச...என்னை ஏத்துப்பார..."

ஸ்ரீதருக்கு சிரிப்புதான் வந்தது...

இவளுடைய காதலன்—இவளுக்குக் கல்யாணம் என்கிற செய்தி கேட்டு, மௌனமாய் எங்கோ இருக்கிறான். இவனால் ஆனதை, இவன் செய்து விட்டான்...இதற்கு மேலும் ஒரு பெண்ணால் என்ன செய்ய முடியும்...

உண்மையிலேயே அக்கறை யுள்ளவனாயிருந்தால், கடிதத்தைக் கண்டதும், எங்கேயிருந்தாலும் ஓடி வர வேண்டாமோ... இப்பேர்பட்டவனிடம் போய் இவள், நம்பிக்கையும் பாசமும் வைத்திருக்கிறாளே...

யமுனாவின் பிரிவு மட்டுமல்ல ஒருவித மதிப்பும், மரியாதையும் கூட அவனுள் விளைந்தது.

"அப்படி, அவன் ஏதாவது சந்தேகப்பட்டான்னா—நான் எங்க அம்மா மேல சத்தியம் பண்ணித்தரேன்... போதுமா?"

அவன், தனது பாயை எடுத்து, அறைக் கதவின் அருகே போட்டுக் கொண்டு படுக்கிறான்...

தூங்குவதுபோல படுத்திருப்பவளையே வெகுநேரம் பார்த்துக் கொண்டு, ஸ்ரீதரும் இரவை நகர்த்துகிறான்...

வடக்கே—

அவன், தனது இருப்பிடத்துக்கு தாயையும், யமுனாவையும் அழைத்து வந்து கிட்டதட்ட ஒரு மாதத்துக்கு மேலாகி விட்டது



கிராமமும் இல்லாத நகரமும் இல்லாத இரண்டுங்கெட்டான் ஊர்...பொதிபொதியாய் செம்மறியாடுகள் மேய்வதையும், கொத்து கொத்தாக—பெயரே தெரியாத பலவித புஷ்பங்கள் பூத்துக் குலுங்குவதையும், மலையடிவாரமாதலால்—சுற்றிவர சுவரெழுப்பினாற் போன்ற மலைத்தொடரும், பஞ்சு பஞ்சாய் பனியும்...யமுனாவுக்கு எல்லாமே பிரமிப்பாகத்தானிருக்கிறது.

ஜானகத்துக்கு அந்தக் குளிர் ஆரம்பத்தில் ஒத்துக் கொள்ளவில்லை. இருக்கிற கம்பளிகளையெல்லாம் போர்த்திக் கொண்டு படுத்து விட்டாள்.

யமுனாதான் வந்தது முதலே — சமையலையும் வீட்டையும் கவனித்துக் கொள்கிறாள்.

சமையல்—யமுனாவின் அழகைப் போலவே அமிர்தமாக இருக்கிறது...

கம்மாவா...சம்பூர்ணத்தின் வீட்டில் எத்தனை வருஷமாய் உழைத்த கை.

ஸ்ரீதருக்குத்தான், ஒவ்வொரு நாளும் குற்றவுணர்வு அதிகமாகிக் கொண்டே வருகிறது...

இவள்—மனைவியாய் இருந்திருந்தால், இவள் செய்யும் சமையலும், தன் தாய்க்குச் செய்யும் பணிவிடையையும், தனது உடைகளைத் துவைத்து உலர்த்தி மடித்து வைப்பதும் பாந்தமாக இருக்கும் போல...

இது என்னவோ, ஒரு மஞ்சள் கயிற்றைக் கட்டி ஒரு சமையற்காரியை, ஒரு வேலைக்காரியை அழைத்து வந்தாற்போல அசிங்கமா இருக்கிறது.

இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இவள் இப்படி இங்கே உழைத்துக் கொண்டிருப்பாள்?

ஜானகமோ, தன் மருமகளை, தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, கொண்டாடாதக் குறைதான்..

MithraVintha

பதினைந்து நாள், முடங்கிக் கிடந்தவன்—பதினைந்து நாள், தட்டுத் தடுமாறி எழுந்து விட்டான்...

"பக்கத்துல ஏதாவது கோவில் இருக்காடா?"

"ஒரு சிவன் கோவில் இருக்கு... பள்ளிக்கூடத்துலே சிவன், நிஷ்டையில உட்கார்ந்திருக்காப்பல... குருக்கள், பூசாரி ஏதுவும் கிடையாது... வாசல்லே விட்டாய் வாங்கிட்டுப் போய் நீயே, வச்சு பூஜை பண்ணிட்டு வர வேண்டியது தான்..."

"அது சரி தினமும் ஆபீஸ்லேருந்து வெறும் கையை வீசிட்டு வர்றிய... அந்தப் பொண்ணுக்கு ஒரு முழம், பூ இல்லே ஏதாவது தித்திப்பு பலகாரம் வாங்கிட்டு வர மாட்டியோ... இது கூடவா நான் சொல்லித் தரணும்..."

கிழவி இதைச் சொல்லும்போது, யமுனா அந்த அறையின் அலமாரியில் வைக்கப்பட்டிருந்த கடவுள் படங்களுக்கு முன்—அமரிக்கையாய் சுடர் விட்டுக் கொண்டிருந்த விளக்கை—திரியை இழுத்து அணைக்கிறாள்:

"ஏம்மா விளக்கை அணைச்சுட்டே..."

"எண்ணெயில்லாம வெறும் திரி மட்டும்... எத்தனை நேரத்துக்கு எரியும்..."

அவள் இதைச் சொல்லிவிட்டு, அவனைப் பார்த்த பார்வை...

"இன்னும் எத்தனை நாளைக்குத்தான் என்னை இப்படியே வச்சிருக்கப் போறீங்க..."

அவன் சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டு, தெருவில் இறங்கி நடக்கிறான்...

அம்மா பாவம், இவர்கள் போடும் நாடகம் தெரியாமல் என்னென்னவோ கனவுகள் கண்டு கொண்டிருக்கிறாள்...



இருந்தால், பதுசாய் ஒருவன் வந்து இவளை அழைத்து தான் அந்தத் தாயின் மனசு என்ன பாடுபடும்...

அந்த அதிர்ச்சியை எப்படித் தாங்குவாள் அம்மா...

அது சரிதான் அம்மாவுக்கு அதிர்ச்சியைத் தாங்க முடியாது என்பதற்காக—இவளை, இவளுக்குரியவனிடம் சேர்க்காமல் இருக்க முடியுமா...

இது சுயநலமில்லையோ?

"என்ன சுயநலம்.. இவளிடம் நான் என்ன எதிர் பார்க்கிறேன்.."

அவளது கண்களில் பொங்கும் தாபமும், ஏக்கமும் அவனை வாள் கொண்டு அறுப்பதாய்..

வேலைகளை எல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறாளே தவிர யமுனா, சாப்பிடும் பொழுது, ஒரு நாளைப்போல ஜனகம் பொருமுவாள்.

"என்னடியம்மா — சின்னக் குழந்தைகூட இன்னும் கொஞ்சம் தாராளமா சாப்பிடும்...இது என்ன நீ, இப்படிக் கொறிக்கறே..."

"சாதம் பிடிக்கலையா.. குளிச்சு எத்தனை நாளாறதும்மா..."

"சாப்பாடு பிடிக்கலைன்னா முறுக்கு, சீடை, இந்த மாதிரி ஏதாவது செஞ்சு தரட்டுமா?"

எத்தனை தர்ம சங்கடமான கேள்விகள்.. அது மட்டுமல்ல.சாமி படத்துக்கு விளக்கேற்றும் போதும், பெரிசு பெரிசாய் பூக்கும் செம்பருத்திப் பூக்களை, மாலையாகத் தொடுக்கும் போதும், வாசலில் புள்ளி வைத்துக் கோலமிடும் போதும், பளிச் சென்ற கம்பளிச் சட்டை அணிந்து ஜோடி ஜோடியாய் ஆணும் பெண்ணும் ஒரு

MithraVintha

வரை பொருளர் இறுக்கிக் கொண்டு போகும் போதும்—அவன் கண்கள் ததும்ப, அப்படியே சிலையாகிவிடுவான்.

அம்மாவோ, அவனோ தான் அவனை, அந்த நிஷ்டையிலிருந்து கலைக்க வேண்டும்.

''அங்கே என்ன பண்றே யமுனா...''

''ம்...ஒன்றுமில்லே. இதோ வந்துட்டேன்...''

அன்றிரவு—

அவன், தன் மனசுக்குள் பலமுறை ஒத்திகை பார்த்துக்கொண்ட வார்த்தைகளை, தயங்கித் தயங்கி, அவளிடம் சொல்கிறான்.

''யமுனா...''

அவள், வாசற்படியருகில் பாயை உதறிப் போட்டுக்கொண்டவள், நிமிர்ந்துப் பார்க்கிறாள்.

''நான், உன்னோட அவருக்கு ஒரு லெட்டர் எழுதிப் போடலாம்னு இருக்கேன்...''

''ஏன்...ஏன்...என்னன்னு...''

அவளது, நீண்ட பெரிய விழிகளில் க்ஷணப்பொழுதிற்குள் மின்னலடிக்கிறது...சிறுசிறு வென ஒரு நிமிஷத்துக்கு தென்றலடித்தது ஒய்கிறது..

''பின்னே...இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்த சுமைய நான் சுமக்கறது சொல்லு.. [இங்கே பாரு சுமையின்னா சொன்னவுடனே தப்பா நினைச்சுக்காதே. ஏதோ இன்னொருத்தன் சொத்தை நான் வச்சிட்டிருக்கற மாதிரி இருக்கு... அதனாலதான் சொல்றேன்..''

''நானே லெட்டர் எழுதித் தரேன். நீங்க போஸ்ட் பண்ணிடுங்க...''

''சரி...''





அன்றிரவு முழுக்க அவள், அரிக்கேன் விளக்கைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஸ்ரீதரைக் கேட்டு, பேனாவும் பேப்பரும் வாங்கி, நறுக்கி எழுதுகிறாள்.

நடுவே, மூக்கை உறிஞ்சும் சத்தம் கேட்டதிலிருந்து, அவள் அழுகிறாள் என்பதை உணருகிறான் அவன்...

இத்தனை அழகான, அடக்கமான பெண்ணை, மனைவியாகப் பெற ஒருவன் கொடுத்து வைத்திருக்க வேண்டும்...

அவன், கொடுத்து வைத்திருப்பதாகத் தோன்றவில்லையே...

மறுநாள் அவன் ஆபீசுக்குக் கிளம்புகிற சமயத்தில் அவள் அந்தக் கடிதத்தை, ஒரு உறையிலிட்டு விலாசமெழுதி, நீட்டுகிறாள்...

இதற்கடுத்த பத்தாவது நாளிலிருந்து, அவன் மாலையில் வீடு திரும்பும் போதெல்லாம் அவளுடைய கண்கள் ஆவலுடன் விசாரிக்கும்.

''லெட்டர் ஏதாவது வந்ததா?''

''ஒன்றுமில்லையே...''

அந்த முகத்தில், கருமேகங்களாய் குவியும் ஏமாற்றத்தைச் சந்திக்க இயலாது பார்வையை, தரையில் பதித்துக் கொள்வான் அவன்...

ஒரேயொரு முறை ஜானகம், மருமகள் தோட்டத்துப் பக்கம் போயிருந்த போது மகனை கேட்கிறாள்

''ஏண்டா, நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கீங்களோல்லியோ...''

அவனுக்கு திக், கென்றாகிறது.

''ஏம்மா அப்படி கேட்கறே?''

''இல்லே அவ என்னமோ பறிகொடுத்தா மாதிரி இருக்காளே...என்ன சொன்னாலும், அந்த முகத்துல சிரிப்பைக் காண்றதே அபூருபமாய் இருக்கேடா..''

MithraVintha

அவன், காலின் பக்கத்தில், சற்று நேரம் மௌனமாக இருக்கிறான்.

"ஒவ்வொருத்தர் சுபாவம் ஒவ்வொரு மாதிரி இல்லே... அவருக்கு தன் சந்தோஷத்தை வெளிப்படையாக் காமிக்க பழக்கமில்லாம இருக்கலாம்...எதுவானாலும் மனசோட வச்சுக்கறதுதான் சுபாவமா இருக்கலாம்."

"ஏதோ... மனசுக்குள்ளேயாவது சந்தோஷம் இருந்தா சரிதான்"

ஜனகம், இதைச் சொல்லி விட்டு கனமானப் பெருமூச்செறிகிறாள். அருகில் அமர்ந்திருக்கும் மகனின் கரத்தை வாஞ்சையுடன் பற்றிக்கொள்கிறாள்.

"அப்பா ஸ்ரீதர்... தாம்பத்தியம்கறது ஒவ்வொரு புருஷன் பெண்டாட்டி நடுவுலேயும், ஒரே மாதிரி இருக்கும்னு நான் சொல்லலை...உங்க அப்பா...அவருக்கு பெண்டாட்டியைக் கொஞ்சவே தெரியாது...அதனால, அவருக்கு என் மேல ஆசை இல்லையின்னு சொல்லமுடியாது. அதே மாதிரி அவர் தம்பிக்கு, தன் பெண்டாட்டிய ரகசியமா கொஞ்சவே தெரியாது. எதுவனாலும் நடுக் கூடத்துலதான் எனக்கு ரொம்ப அவமானமா இருக்கு அண்ணீன்னு—உங்க சித்தி சொல்லிப் புலம்புவா....ஆனா ஒரு விஷயம்...உங்க அப்பாவுக்குக் கொஞ்சி, சிரிச்சுப் பேசத் தெரியல்லையிங்கறதுக்காக நான் வருத்தப்படல்லே. அவரோடப் பிரியமும் அன்பும் என் அந்தராத்மாவுக்குத் தெரிஞ்சது. என்னைப் பொறுத்த மட்டும் நான் சந்தோஷமாத்தான் இருந்தேன்...ஆனா...உங்க ரெண்டு பேர் மனசுலேயும் சந்தோஷம்கறது லவலேசம்கூட இல்லையின்னு எனக்குத் தோணறதுடாப்பா."

அதைச் சொல்லும்போதே ஜனகம் அழுதுவிட்டாள்—

அதற்கடுத்த சில நாட்களிலேயே—அவள் ஒரே படுக்கையாகப் படுத்துவிட்டாள்...



வீட்டில் வைத்திருந்தால், நிலைமை ரொம்பவும் மோசமாகிவிடும் என்று டாக்டர் எச்சரித்தார். அவளை பக்கத்திலிருந்த ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு, ஆபீசுக்கும் லீவு போட்டுவிட்டு, ஸ்ரீதர்தான் நடையாய் நடக்கிறான்.

யமுனா, வீட்டிலிருந்தபடியே ஜனகத்துக்குக் கஞ்சியும், அவனுக்கு சாப்பாடும் சமைத்துக் கொடுப்பாள்.

தினமும் அவன், ஆஸ்பத்திரியிலிருந்து வரும்போது, அக்கறையுடன் கேட்கத் தவற மாட்டாள்...

"இப்ப எப்படியிருக்காங்க"

"அப்படியேதான்... அப்பப்ப நினைவு போயிட்டுத் திரும்பறது... அவங்களுக்கு மனக்கவலைதாங்கறார் டாக்டர்...நாம என்ன செய்ய முடியும் சொல்லு"

இதற்கு அவள், எதுவும் சொல்லாமல் மௌனமாக நிற்பாள்

அன்று—

அவன் மாலையில் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பும் போதே உள்ளேயிருந்து பேச்சுக்குரல்—அதுவும் ஆண் குரல்—நல்ல தமிழில் வெளிவர—

அவன் சற்று தயங்கி வாசலிலேயே நிற்கிறான்.

# 4

வந்திருப்பது பரசுராம்தான்...

செவிகளில் வந்து விழுந்த முதல் வார்த்தையே, ஸ்ரீதரின் சந்தேகத்தைத் தெளிவாக்கிவிட்டது.

MithraVintha

"எங்க இத்தனை நாளும், நான் போட்ட லெட்டருக்கு ஒரு பதில்கூடப் போடல்லே... நிஜம்மாலே என்னை மறந்துட்டீங்களா..."

"சீச்சீ...என்ன யமுனா... நீ எனக்கு லெட்டர் போட்டா, ஆபீஸ்லே நான் தான் படிப்பேன்... படிச்சுட்டு உடனே கிழிச்சி போட்டுவேன்..."

"கிழிச்சி போட்டுவீங்களா..."

யமுனாவின் குரலில் தொனித்த ஆதங்கம் ஸ்ரீதருக்குப் புரிகிறது. இவனுக்குக் கடிதம் எழுதின அன்றிரவு அவள், எத்தனை கண்ணீர் சிந்தினாள் என்பதும், இவனையே நினைத்து, நினைத்து, இவள் எவ்வளவு இரவுகள் தூங்காமல் தவித்திருக்கிறாள் என்பதும், அவனுக்கல்லவா தெரியும்...

பரசுராமன் அவளது நினைப்பைப் புரிந்துகொண்டவன்போலப் பேசுகிறான்.

"ஆமா யமுனா... கிழிச்சுப் போடாம வேற என்ன செய்யறது சொல்லு...சட்டையிலேயோ ஃபைல்லேயோ வச்சுகிட்டு வீட்டுக்கு போய், விஷயம் தெரிஞ்சா, எக்கச்சக்கமா ஆயிடாதா...?"

"சரி, எனக்கு ஒரு பதிலாவது போடக் கூடாதா?"

"நல்லாயிருக்கே நீ சொல்றது...நீ கொடுத்திருக்கறது உன் புருஷனோட அட்ரஸ்...அந்த அட்ரசுக்கு நான் எப்படி..."

யமுனாவிற்கு எங்கிருந்துதான் அத்தனை கோபம் வந்ததோ?

சீறி வெடிக்கிறாள்...

"என்ன சொன்னீங்க?"

"என்ன சொன்னேன்..."



"சித்த முந்தி என்னவோ உன் புருஷனோட...."

"ஆமா உன் புருஷனோட அட்ரஸ்னு சொன்னேன்... இதுல என்ன தப்பு?"

அவர் எனக்கு புருஷன்னா, நீங்க யாருங்க?"

"நான்...நான்"

"ஷ்...இருங்க ஒண்ணும் தெரியாத வயசுல, என் மனசுல ஆசைய மூட்டி, என்னை "ஆண்டது" முழுக்க நீங்க...தாலி கட்டினதுலேயிருந்து இந்த ஆறு மாசத்துல, விரல் நுனியாலேக் கூட என்னைத் தொடாதவரு அவர்."

"இதை என்னை நம்பச் சொல்றியா யமுனா..."

"நம்பறதும், நம்பாததும் உங்க இஷ்டம்...தாலி கட்டறவன் தான் புருஷன்னா—அந்த ஆள் எனக்கு அப்படிப்பட்ட உறவு முறைதான் ஆகணும் பெண்டாண்ட மனுஷன் புருஷன்னா—நீங்க எனக்கு அந்த உறவு முறையாகணும் இதோ, இந்த நிமிஷம் வரைக்கும் என் மனசுல உங்களைத் தவிர—வேற ஒரு மனுஷன் இல்லை. என்னை எப்ப, நாலு பேருக்குத் தெரிய உங்க பெண்டாட்டியா அறிமுகப் படுத்தப் போறீங்க. முந்திதான் படிப்பு முடிச்ச புதுசு சரியான வேலை இல்லே...அது, இதுன்னு ஆயிரம் காரணம் சொன்னீங்க. இனிமேலும் என்ன தயக்கம்?"

அவன், வெகு நேரம் வரையில் மௌனம் சாதிக்கிறான்.

"நீ, ஆத்திரத்துல பேசறியே தவிர, பல விஷயங்களை மறந்துட்டேயே யமுனா..."

"இந்த ஆத்திரமும் அவசரமும், நீங்க கொடுத்தது தாங்க அன்னிக்கு இதே ஆத்திரத்துல தான் நீங்க பல விஷயங்களை மறந்தீங்க..."

"இருக்கலாம் யமுனா. இப்ப நாம ரெண்டுபேரும்

MithraVintha

இல்லைங்க. இப்ப உனக்கும் கல்யாணமாயிடுச்சு, எனக்கும் வீட்டுல வரன் பார்த்துட்டிருக்காங்க..."

"இதைச் சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லே..."

"ஏன் எதுக்காக வெட்கப் படணும்? என்னைக் காதலிச்ச நீ... நானில்லேயின்னா கிணத்துலேயோ, குளத்துலேயோ விழுந்து செத்துப் போயிடுவேன்னு சொன்ன நீ...இந்தக் கழுத்துல உங்க கையாலே தாலி ஏறினாத்தான், கடவுள்னு ஒருத்தர் நிஜமாகவே இருக்கார்னு நம்புவேன்னு சொன்ன நீ...இப்ப வேற ஒருத்தருக்கு எப்படி கழுத்தை நீட்டினியோ...அது மாதிரி தான் இப்ப நானும்..."

ஸ்ரீதருக்கு நெற்றி நரம்புகள் புடைக்கிறது...கையிலிருக்கிற டிபன் கேரியரை விட்டெறிந்துவிட்டு ஓடிப்போய் அவள் கழுத்தை அப்படியே இறுகப் பிடிக்க வேண்டும் போல இருக்கிறது...யமுனா என்ன சொல்லப்போகிறாள் என்பதற்காக, அதைக் கேட்க வேண்டும் என்பதற்காக, அவன் பல்லைக் கடித்தபடி வாசலில், திண்ணையோரமாய் பொடி நடை போடுகிறான்.

"எப்ப எனக்குக் கல்யாணம் நிச்சயமாச்சோ, அப்பிலேருந்து உங்களுக்கு லெட்டர் மேல லெட்டர் போட்டுட்டிருந்தேங்க நான் கடைசி மட்டும் நீங்க வரவேயில்லை...ஏன், கல்யாணம் முடிஞ்ச மறுநாள் கூட ஊருக்குப் போற வழியெல்லாம், எங்கேயாவது நீங்க கடைசி சமயத்துல ஓடி வருவீங்களோன்னு...அவர் கிட்ட சொல்லி, சென்ட்ரல் ஸ்டேஷன்லே கூட, சுத்தமா போட்டு சலிச்சுப் பார்த்தேன்...ஸ்ரீதருங்க, அப்போ போனா இருந்துட்டு...சீ...அதெல்லாம் இப்ப எதுக்கு... நான் தான் வேண்டாதவளாப் போயிட்டேனில்லே இப்ப இங்கே எதுக்காக வந்தீங்களாம்?"

"என்னை மன்னிச்சு மாத்தினாலும் மாத்திருவாங்க...



நான், உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியல்லையே தவிர—நீ எப்படி எனக்கு வேண்டாதவளா ஆயிடுவே யமுனா...எங்க அம்மா, ஊரெல்லாம் தேடி ஒரு அட்டைரல்லையே எனக்கு கல்யாணம் பண்ணி வச்சாலும் உன்னை மாதிரி ஆகாது யமுனா...என்ன இருந்தாலும் என் மனசுல, முதல் இடம் உனக்குத்தான்..."

"மனசுலதானே...வாழ்க்கையில இல்லையே?"

"இல்லையின்னு யார் சொன்னது யமுனா...பெரியவங்க நம்மைப் பிரிச்சு, வேற வேற எடத்துல கல்யாணம் செஞ்சு வைக்கத்தான் முடியுமே தவிர — அதுக்கு அப்புறமா, நான் உன் கிட்ட தொடர்பு வச்சுக்கறதை தடுக்க முடியாது இல்லையா..."

"புரியல்லே..."

"எப்படி, உன் கழுத்துல தாலி கட்டினவனுக்கு புருஷன்கற உறவு முறை மட்டும்தான் மிஞ்சிச்சோ, அதே போலத்தான் இதுவும்...என் கையாலே தாலி கட்டிக்கறவ ஊரறிய என் பெண்டாட்டி. அவ்வளவுதான்...டில்லியிலே விருந்து இங்கே மூணு மணி நேரப் பிரயாணம்தான்... நாம, பழையபடி சந்தோஷமா இருக்கலாம்..."

"எழுந்திரு..."

"யமுனா..."

"போடா வெளியே...எச்சில் பொறுக்கி நாயே... உனக்கும் போய், என்னைக் கொடுத்தேன் பாரு...இந்த உடம்பை, துண்டு துண்டாக்கி, உப்புக் கண்டம் போட்டாக் கூட, ஏழேழு ஜன்ம முழுதும் பாவம் தொலையாது...இன்னும் என்ன பார்த்துட்டு நிக்கிறே... போடா அண்ணா...செருப்பாலே அடிப்பேன்..."

வெளி வாசலில் மலைத்து நின்ற ஸ்ரீதர், அவள் வெளுத்த தோற்றத்தில், தான் அங்கு நிற்பது சரியில்லை என்பதால்—சட்டென நகர்ந்து போகிறான்.

MithraVintha

மனசுக்குள் தாங்க முடியாத பிரமிப்பு.

'யமுனாவா இத்தனையும் பேசினாள்...'

'அதிர்ந்து ஒரு வார்த்தை கூடப் பேசியறியாத அந்தப் பெண்ணா...'

'ஐயோ' அவனுக்காக எத்தனை உருகினாள்...'

'நான் போய்' அவளை இரண்டு தட்டு தட்டி என்னடாவென்று கேட்டிருக்கலாமோ...'

'எப்படி கேட்பது...அவளது அனுமதியில்லாமல்...'

அன்று, அவன், கையில் வெற்று டிபன் கேரியருடன் ஊரெல்லாம் சுற்றிவிட்டு, வீடு திரும்பும்போது இரவுமணி எட்டு...

இரவு நேரங்களில் ஜனகத்துக்குத் துணையாக ஸ்ரீதரின் அலுவலகத்தில் வேலை பார்க்கும் வாட்ச்மேன் படுப்பதால், அவன் காலையில்தான் ஆஸ்பத்திரிக்குப்போவான்.

மிகவும் கவலைக்கிடமான நிலையிலுள்ள தாயை விட்டு விட்டு, அவன் போக விரும்பவில்லைதான். ஆனால், ஜனகத்துக்கு மொழி தெரியாத ஊரில் தன் மருமகள் தனியாக இருக்கிறாளே—அதுவும் இரவு நேரத்தில் என்கிற கவலை...மாலை மணி நாலடித்ததுமே விரட்டி விடுவாள்.

"கிளம்புடா...கிளம்பு...இப்ப கிளம்பினாத்தான் இருட்டறதுக்குள்ள வீடு போய் சேரமுடியும்..."

ஸ்ரீதருக்கும், யமுனாவைத் தனியே விட்டு வருவதில் கவலைதான். அவன்பாடு ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒரு கால்தான்.

அவன் மறுபடியும் வீட்டுக்குள் நுழைந்தபோது—யமுனா, சாமி அலமாரிக்கு எதிரே கவிழ்ந்துப் படுத்திருக்



கிறாள். அத்தனை நேரமும் அழுதிருக்கிறாள்போல இருக்கிறது...கண்களும், முகமும் 'புசுபுசு'வென்று...

"என்ன யமுனா" விளக்கேத்தலே"

அவனது குரல் கேட்டு, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறாள் அவள்.

"வாங்க...ஏன் இத்தனை நேரம்"

"ஆபீஸ் ஃப்ரெண்ட் ஒருத்தனைப் பார்த்தேன், பேசிட்டேயிருந்ததுலே நேரம் போனதே தெரியல்லே...சரி, சரி... நெருப்பு பெட்டி கொண்டா...அம்மாவுக்கு, சாமி படத்துகிட்ட இருக்கிற விளக்கு மாத்திரம் எரிஞ்சுட்டே இருக்கணும்...இல்லைன்னா திட்டுவாங்க..."

அவன், நெருப்புக் குச்சியை உரசும்போது மிருதுவாய் கேட்கிறான்.

"தலையும் மூஞ்சியும் என்னமோ மாதிரி இருக்கு... அழுதியா யமுனா..."

"இல்லையே...தலைவலி..."

"ஓ. அந்த அலமாரியில மாத்திரை வச்சிருப்பேன் எடுத்துப் போட்டுக்க..."

அவன், அந்தப்பேச்சை மாற்ற விரும்புகிறவன்போலக் கேட்கிறான்;

"விளக்குல எண்ணெய் இருக்கா...கொண்டு வரட்டுமா..."

"எண்ணெய் திரி ரெண்டும் இருக்கு யமுனா...ஏத்தி வைக்கத்தான் ஆளில்லை..."

"ஏன் இல்லே...சித்த முந்தி ஏத்தினேன்...காத்துல அணைஞ்சு போயிருச்சு..."



MithraVintha

"பரவாயில்லே விடு அணைஞ்ச விளக்கை மறுபடி ஏத்தறதுல தப்பில்லே.."

அவன், சொடுக்கி விட்டாற்போல, அவளை ஏறிட்டுப் பார்க்கிறான்..

அவளது முகத்திலிருந்து எதுவும் கண்டு கொள்ள முடியவில்லை.

"சாப்பிட வர்றீங்களா..."

"இம் நீ"

"எனக்குப் பசிக்கலே..."

"அப்ப, எனக்கும் பசிக்கல்லே..."

"இது என்ன விதண்டாவாதம்..."

அவளுக்கு 'சுள்'ளெனக் கோபம் வருகிறது.

"எனக்குப் பசிக்கலைன்னா ஆளை விடுங்களேன். ஏற்கனவே தலைவலி வேற..."

"சரி...கொஞ்சம் போறடீ கலந்திட்டு வரட்டுமா."

"ஒரு எழவும் வேண்டாம்..."

அவள், தன்னை மீறி கத்த, அவளை நிதானமாய் ஒரு முறை அவன் பார்த்துவிட்டுச் சமையலறைக்குள் போகிறான்.

முதலில், அவனுக்கும் சோறு வேண்டாம் என்றுதான் தோன்றுகிறது. ஆனால், சமைத்து வைத்துள்ள பண்டங்கள் அத்தனையும், தான் சிந்திய வியர்வைக்காக அலுவலகத்தில் கொடுத்த கரன்சியில் வாங்கியது என்கிற உண்மை நெஞ்சைச் சுட.

தட்டை எடுத்துப்போட்டுக்கொண்டு உட்காருகிறான் அவன்.



அப்பொழுதுதான் இந்த மாதிரி சமயத்தில் அம்மா பக்கத்தில் இல்லையே என்கிற தாபம் நெஞ்சில் பொங்குகிறது

புறங்கையால் கண்களில் துளிர்க்கும் நீரை துடைத்தபடி சோற்றை அள்ளி, தட்டில் போட்டுக் கொள்கிறான். குழம்பை அதன்மீது ஊற்றிக் கொள்கிறான்—

அந்த சமயத்தில்தான் சமையலறை வாசலில் நிழலாடுகிறது. ஸ்ரீதர் திரும்பிப் பார்க்கவில்லை...பார்க்கவும் பிரியப்படவில்லை.

'ச்சே—என்ன பெண்ணிவள்...'

இவள் கொடுத்த கடிதத்தை தபாலில் சேர்த்து விட்டு இவளை விடவும் அதிகமாய் கவலைப்பட்டு ஏங்கினவன் நான்...என்னிடம் ஒரு வார்த்தை...அந்த மனிதன் வந்து போனதைப் பற்றிச் சொன்னாளா பார்..."

அந்த நேரத்தில், இவளுக்காக நாம் எதற்காக இத்தனை செய்ய வேண்டும் என்று கூடத் தோன்றியது.

அவள் வெகு நேரம் அங்கேயே நிற்கிறாள்.

"நான் வந்து பரிமாறட்டுமா..."

"வேண்டாம்...நானே பார்த்துக்கறேன்..."

மறுநாள்...

இவள் கஞ்சி கொண்டு வரவேண்டும் என்று காத்திருந்தது போல, மகளைக் கண்ணாரப் பார்த்துவிட்டு ஜெகம் கண்களை மூடுகிறாள்.

அவள் கடைசியாக சொன்ன வார்த்தைகள் இதுதான்:

"ஸ்ரீதரா..."

"அவளைச் சந்தோஷமா வச்சுக்க..."

MithraVintha

''.........''

"சின்ன சிறுகல இப்படி தான்...மனசு, கையில கிடைச்சிருக்கற வாழ்க்கைய விட்டுட்டு, வேற ஏதோ கிடைக்க வேண்டிய ஒரு பதவி தனக்குக் கிடைக்கல வேங்கறாப்புல வருத்தப்படும், ஏங்கும் ஆனா, அப்படியே எங்கிட்டிருந்தா—வயசும் காலமும் பறந்துடும்ப்பா..."

"நீ கொஞ்சம் நேரம் சும்மாயிரும்மா...மூச்சிரைக்குது பாரு..."

"இனிமே நான் சும்மாதானே இருக்கப் போறேன்..."

''.........''

"இங்கே பாரு... இத்தனை நாளுல, நீயும் எத்தனை நாளு, புருஷன் பெண்சாதியா வாழ்ந்திருக்கீங்களோ... எனக்குத் தெரியாது. ஆனா, என்னோட மனசுமட்டும் அடிச்சுட்டே கிடக்கு. அடி பைத்தியக்காரி... ஏமாந்துட்டி யேடியின்னு... ஏன்டா, நான் ஏமாந்துட்டேனா..."

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லேம்மா..."

"ஏதோ நீ சொன்னா சரி...நான் நம்பறேன், ஆனா பருமனின்னு எனக்குத் தோணிச்சுடா... எல்லாரையும் பார்த்தா அப்படித் தோணுமா என்ன..."

"டாக்டர் உன்னை அதிகமாப்பேசக்கூடாதுன்னு..."

"அட, அந்த மனுஷன் எப்பத்தான் பேசுன்னு சொல்லியிருக்கான், நான் சொல்ல வந்ததைச் சொல்லிட றேன்... யமுனாவும் நீயும் இப்ப சந்தோஷமா இல்லையி னாலும் நாளடைவுல ஒத்துப்போயிடும்னு தோணு துடா..."

"நீ சொன்னா சரிதாம்மா..."

"என்ன சரிதான், அப்ப இப்ப ரெண்டுபேரும் மன சொத்து இல்லைங்கறதை நீயே ஒத்துக்கறியா..."



"என்னம்மா இது..."

"என் கையில சத்தியம் பண்ணிக் கொடு..."

"என்னன்னு..."

"எந்தக் காரணத்தைக்கொண்டும் வீட்டுக்கு வந்த லட்சுமியை அடிச்சு விரட்டமாட்டேன்னு..."

''......''

"செய்யுடா..."

"சரி...செய்யறேன்..."

"இன்னார் வீட்டு மருமக, சோறு தண்ணியில்லாம, புருஷனால விரட்டி அடிக்கப்பட்டு, தெருத் தெருவா அலைஞ்சான்னு நாளைக்கு ஊரார் சொல்லிடக்கூடாது.

"கண்டிப்பா, அந்த மாதிரியொரு நிலைமைக்கு நான் காரணமா இருக்க மாட்டேம்மா..."

அவனிடமிருந்து கடைசியாகப் பெற்ற வாக்குறுதி யிலேயே அவள் திருப்தி பெற்றுவிட்டாள்.

அம்மாவின் சடலத்தை வீட்டுக்குக் கொண்டு வந்த வன்—அதன் மீது புரண்டு விழுந்து கதறிய போதெல்லாம் கூட, யமுனா அவனைத் தேற்றவோ, சமாதானப் படுத்தவோ முயலவில்லை...

பெற்றவளின் இறுதிக் கடன்களை செய்யத் தொடங் கியபோதுதான்—அவனுக்கு அந்தப் பிரச்னை எழுகிறது.

இது புருஷனும் மனைவியுமாய் செய்ய வேண்டிய காரியங்கள்.

நான் புருஷனென்றால், மனைவி யார்?

அடுத்த அறைக்குள் சுருண்டு படுத்திருப்பவளா...

அவளுக்கும், எனக்கும் என்ன சம்பந்தம்...

MithraVintha

ஆனால் அம்மா, கடைசி மட்டும், அவனைத்தானே தனது மருமகனாய் நினைத்துக் கொண்டிருந்து விட்டுக் கண்களை மூடியிருக்கிறாள்.

ஐயோ...இது என்ன கஷ்டம்...

"உங்க சம்சாரம் எங்கே?"

அம்மாவின் காரியத்தை நடத்திக் கொடுக்க வந்த பண்டார ஒருவர் கேட்ட போது—அவன், இந்தியில் சொல்கிறான்.

"அவ இங்கே இல்லே... பிரசவத்துக்கு ஊருக்குப் போயிருக்கா..."

"அப்ப, அந்தப் பொண்ணு..."

"அவ எங்களுக்கு தூரத்து உறவு..."

"அதற்குமேல் வம்பு விசாரிக்கத் தெரியாத அந்த மனிதன் காரியத்தை நடத்திக் கொண்டு போகிறார்..."

தனி ஆளாய் அவன், தனது தாய்க்கு செய்யும் கடன்களை—கடமைகளை, அவளும் மூன்றாம் மனுஷி போல ஒதுங்கியிருந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாள்.

அவளுள்ளும், இந்தச் செயல்கள் பாதிப்பை விளைவிக்காமல் இல்லை...

ஏதோ ஒரு வேகத்தில் மனிதத் தன்மையே துளிக் கூட இல்லாத மிருகத்துக்கு தான் பலியானதற்காக வருந்தப் படுவதா...இல்லை இந்தத் தூய மனிதனின் எல்லாக்காரியங்களிலும் தோள் கொடுக்க முடியாமைக்காக வருந்தப் படுவதா—

தான் எதற்குமே தேவையில்லை என்றால், அந்த வீட்டுக்குச் சோற்றுக்கு பாரமாய் இருந்துதான் என்னபயன்.



யோசித்து, யோசித்து, கடைசியில் ஸ்ரீதரை விட்டு விலக சரியானதொரு காரணத்தை, கற்பனை செய்து கொள்கிறாள் அவள்

திடீரென நான் வீட்டை விட்டுப் போகிறேன் என்றால், 'சரி...டாடா'...என்று சொல்கிற ரகமில்லை அவன்.

எங்கே எதற்கு என்று ஆயிரம் கேள்வி கேட்பான். அதற்கெல்லாம் யோசித்து யோசித்து மனசுக்கு பதில் தயாரித்து வைத்துக் கொண்டு தான் அவனுடன் பேசவே ஆரம்பிக்கிறாள் அவள்.

அவனோ...

அன்றுடன் அம்மாவுக்கான காரியங்கள் முடிவுற கூடத்தின் ஒரு பக்கமாய் போட்டிருந்த நாடா கட்டிலில் முடங்கிக் கிடக்கிறான் அவன்.

அவள், மெதுவாக நிலைப்படியருகே வந்து நிற்கிறாள்.

"நான் கிளம்பலாம்னு இருக்கேன்."

"......"

"உங்க கிட்டதானே சொல்றேன்..."

"எல்லாம் காதுல விழுது. எங்கே போறாப்பலே..."

"இத்தனை நாளும் உங்க அம்மா இருந்தாங்க அது எனக்குப் பெரிய பாதுகாப்பா இருந்தது..."

"கடைசி வரைக்கும் அவ, நம்மைப்பத்திய கவலையோடவே செத்தா"

"......"

"சரி சொல்ல வந்ததை சொல்லலாம்..."

MithraVintha

"இத்தனைக்கும் பிறகும் நான் உங்க வீட்லே சாப்பிட்டுட்டு இருக்கறது நியாயமுன்னு தோணலே... அதனால..."

"......"

"எல்லாம் சரி எங்கே போறேன்னு சொல்லிட்டுப் போறது நல்லதில்லையா..."

"உம்..."

ஒரு கணம் தயங்கியவள், அடுத்த கணம் என்ன நினைத்துக் கொண்டாளோ 'பளிச்'சென சொல்கிறாள்.

"எனக்கும், அவருக்கும் பொறந்த குழந்தை ஒண்ணு மெட்ராஸ்லே அநாதை ஆசிரமத்துல வளர்றது..."

"என்னது..."

"ஆமா... குழந்தைக்கு இப்ப மூணு வயசு இருக்கும். நான் போய் என் குழந்தையோட ஆசிரமத்துலேயே வாழறேன்."

அவன், அவளைக் குத்துவது போலப் பார்க்கிறான்.

"இதை என்னை நம்பச் சொல்றியா..."

"நம்பறதும் நம்பாததும் உங்க இஷ்டம்..."

அவன், சட்டென எழுந்து உட்கார்கிறான்.

"இங்கே பாரு. எந்த காலத்துலேயும், எந்த காரணத்துலேயும் உன்னை வீட்டை விட்டு வெளியே துரத்த மாட்டேன்னு எங்க அம்மா கிட்ட சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கேன்..."

"இப்பக் கூட, நீங்க என்னைத் துரத்தலை நானே தான் போறேன்னு சொல்றேன்."

"நான் துரத்தி நீ போனாலும் சரி... நீயாப் போனா



லும் சரி எங்க அம்மா, உன்னை தன் மருமகளா ஏத்து படிருக்கா... எங்க அம்மாவோட மருமக—இப்படி அநாதை ஆசிரமத்துல திண்டாடக் கூடாது. சரி, உன் குழந்தை எங்கே வளர்றதுன்னு சொல்லலே..."

"அவள், தயங்கி தயங்கி, தான் எப்போதோ பட்டணத்தில பட்டணத்தில் பார்த்த ஒரு அநாதை ஆசிரமத்தின் பெயரைச் சொல்கிறாள்.

"உம்... ஆணா—பொண்ணா..."

"பொண்..."

அவள் வாய்க்கு வந்ததைச் சொல்கிறாள்.

## 5

இவள் சொல்வது பொய் என்பது—ஸ்ரீதருக்கு அப்பட்டமாகப் புரிகிறது.

எதற்காக இவள் இப்படியொரு பொய்யை சொல்ல வேண்டும்...

இங்கேயிருந்து எப்படியாவது விலகிப் போய்விட வேண்டும் என்ற நினைப்பு—இவளை இப்படிப் பேச வைக்கிறதா?

ஸ்ரீதர், அவளது கண்களுக்குள் ஆழ்ந்துப் பார்க்கிறான்... அவளோ. கண்களை, ஜனகத்தின் உடல் கிடந்த இடத்தில் எரியும் குத்துவிளக்கையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

ஒரு நிமிஷம்—ஸ்ரீதரிடம், பரசுராம் வந்து விட்டுப் போனதைப் பற்றிச் சொல்லிக் கதறி விடலாமோ என்று கூடத் தோன்றுகிறது யமுனாவுக்கு.

Mithra Vintha

ஒரு நிமிஷம் தான்...உடனேயே தன் எண்ணத்தை மாற்றிக் கொள்கிறான்.

என்னதான் அவளைப் பற்றிய நல்ல அபிப்பிராயங்கள் எல்லாம் பறந்து போயிருந்தாலும்—ஸ்ரீதரிடம் அவளை விட்டுக் கொடுப்பது என்னமோ, பெரிய கௌரவக் குறைச்சல் போல, அவனுக்குத் தோன்றுகிறது.

'இவர் என்னைப் பற்றி, எவ்வளவோ உசத்தியா நினைச்சுட்டிருக்கார், இவர் கிட்ட போய்—போயும் போயும் ஒரு ரவுடியை, ஒரு பெண் பித்தனை நம்பி ஏமாந்துட்டேன் கற விஷயத்தை ஏன் சொல்லணும்...'

'இவரைப் பொறுத்த மட்டும், என்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கினவள், உண்மையானவளா, என்னை மட்டும் விரும்பறவளா, எனக்காக, இன்னும் தன்னைப் பெத்தவங்க கிட்ட சண்டை போட்டுட்டு இருக்கறவளாத் தான் இருக்கட்டுமே ... எதுக்காக, எல்லாத்தையும் சொல்லிச் சிறுமைப் பட்டு நிற்கணும்...'

'என் அதிருஷ்டம்...இப்படியொரு கேவலா புத்தியுள்ள மிருகத்தை நம்பி ஏமாந்துட்டு, இப்ப நல்ல மனுஷனுக்குப் பெண்டாட்டியா இருக்க வேண்டிய, பாக்யெத்தையும் இழந்துட்டு நிக்கறேன்...இதை வேற தண்டோராப் போட்டு சொல்லணுமா...'

அவன், கூடத்து நிலைப்படியில் சாய்ந்து நிற்க—

அவள், 'நீ எந்த வழியாகப் போனாலும்—நானும், அந்த வழிக்கு வருவேன் பெண்ணே, என்பது போல அவனையே விழுங்கி, விடுவது போலப் பார்க்கிறாள்.

"குழந்தை இருக்கிறதா இத்தனை நாளும் ஏன் சொல்லலே..."

"எப்படியும் அவர் வந்து அழைச்சுட்டுப் போவார்; அப்ப நாங்க ரெண்டு பேருமாலே ஆசிரமத்துக்குப் போய் எங்க குழந்தைய வாங்கிக்கலாம்னு இருந்தேன்..."



"இப்ப என்ன...அவர் வந்து அழைச்சுட்டுப் போக மாட்டேன்னு சொல்லிட்டாரா..."

—இதைக் கேட்டு விட்டு, இப்படியொரு கேள்வியைக் கேட்டிருக்க வேண்டாமோ என, அவன்தான் தவித்துப் போகிறான்...

அவள், தலையை உயர்த்தியிருந்தால், முகத்தில் ஓடும் உணர்ச்சிகளை அறிந்திருக்க முடியும், அவள்தான், சூரியனைக் காணாத சூரியகாந்திப் பூ போல, கவிழ்ந்த தலையை நிமிர்த்தாமல் நிற்கிறாளே...

'அழுத்தக்காரி...அகம்பாவக்காரி...'

ஸ்ரீதர், அவளை மாசக்கும்—அவனது வீம்பை நினைத்து, புன்னகையுடன், செல்லமாய் கடிந்துக் கொள்கிறான்.

'சரி...இவனாலே எந்த அளவுக்குப் பொய் சொல்ல முடியறது...அதையும்தான் பார்ப்போமே...'

அவள் குறுகுறுவென அவனையே பார்க்க—அவனோ, இவனது நினைப்புகள் ஓடும் ஓட்டம் அறியாமல், இஷ்டத்துக்கு அடுக்கிக் கொண்டே போகிறான்.

"அவர் கிட்டயிருந்து லெட்டர் வந்தா, முதல்லே உங்களுக்கில்லே தெரியும்?"

"ஓ...அதுவும் சரிதான்...பின்னே எப்படி, அவர் இனிமே வரமாட்டாருன்னு நீயாவே தீர்மானம் பண்ணினே?"

"அவர் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர்...அவர், என்னைக் கல்யாணம் பண்ணிக்கறதை, அவர் வீட்டைச் சேர்ந்தவங்க அனுமதிக்க மாட்டாங்க..."

"ஓ...ஒண்ணு வேணா செய்யட்டுமா...நான், நேரே மெட்ராஸுக்கு உன்னையும் அழைச்சுட்டு, அந்த ஆளோட ஆபீசுக்கே போய் கேட்கட்டுமா..."

MithraVintha

இந்தக் கேள்வியில், அவன் கொஞ்சம் அதிர்ந்து விட்டாற்போலத் தோன்றியது.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். [illegible] இல்லத்துலே குழந்தையை விட்டுட்டுப் போனேன்; இப்ப எனக்கு வேற ஆதரவில்லைன்னு சொல்லிட்டு, நானும் அங்கேயே இருந்திடறேன்..."

"உனக்கு ஆதரவில்லைன்னு யார் சொன்னது?"

இதைக் கேட்கும் பொழுதே துக்கம் தொண்டையை அடைக்கிறது அவளுக்கு.

அவன் இதற்குப் பதிலளிக்காமல் நிற்கிறான்.

"[illegible]"

"ம்..."

[illegible]



[illegible]

இது என்ன...

[illegible]

ஸ்ரீதர், இதைச் சொல்லி விட்டு, தன் காரியத்தை கவனிக்கச் சென்று விட்டான்.

[illegible]

அவன் சமைக்க கூடாது என்றில்லை.

[illegible]

மறுநாள்—

அவனே சொல்லி விட்டான்.

"[illegible]"

"[illegible]"

"[illegible]"

[illegible]

MithraVintha

சொல்லிட்டுப் போயிருக்காங்க அவங்க ஆசீர்வாதம் பலிக்குதோ இல்லையோ. அந்த ஆத்மாவோட ஆசைக்கு மதிப்பாவது கொடுக்கணும்னு தோணுது...தயவு செஞ்சு யமுனா...உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்...நான் பயப்படற மாதிரி எதுவும் செஞ்சுக்காதே... முதல்லே என்னாலேயே அதை தாங்க முடியாது..."

சென்னையில்—

அந்த அநாதை விடுதிக்கு சமீபத்தில் இருந்த ஒரு ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டு அவர்கள் தங்கினார்கள்...

அந்தக் கணத்தில் கூட, நான் சொன்னதெல்லாம் பொய் என்று சொல்லிவிட வேண்டும் என்று தான் விரும்புகிறான் அவன்.

அதைச்சொன்னால்—ஸ்ரீதர் சும்மாயிருக்கமாட்டான். நேரே பரசுராமின் ஆபீசுக்குச் சென்று அடிதடியில் இறங்கினாலும் இறங்கலாம். ஸ்ரீதரின் முயற்சியில், பரசுராம் பணிந்து இவளை ஏற்க முன் வந்தாலும்—இவளால் மறுபடியும் அவன் முகத்தைப் பார்க்கவே பிடிக்காதே...

அந்தத் தெருவில் நடக்கும்போதே—பிரும்மாண்டமான சம்பூர்ணத்தில் பங்களாவைக் கடக்கும்போதே—நெஞ்சு ஒருமுறை விம்மித் தணிகிறது...

"சே! எத்தனை முட்டாள்தனமாக ஏமாந்தேன்..."

அநாதை விடுதியின் தலைவிக்கெதிரில் நின்றபோதும் அவளுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை...ஸ்ரீதர் தான் சரளமான ஆங்கிலத்தில் உரையாடுகிறான்...

"இவங்க குழந்தையை எந்த வருஷம் எந்த தேதியில் விட்டுட்டுப் போனாங்கன்னு சொல்லமுடியுமா...அப்படி விடறச்சே ஏதாவது அடையாளம்...குழந்தைக்கு அப்ப என்ன வயசு..."





யமுனா, கண்களை மூடி, ஒரு கணம் யோசிக்கிறாள்.

தெரிந்தோ, தெரியாமலோ விஷப்பரிட்சையில் இறங்கியாகிவிட்டது...இனிமேல் தயங்கினால் முடியுமோ...

அவள், தனக்கு அபார்ஷன் செய்தபோது எத்தனை மாசம் என்று யோசிக்கிறாள்.

மூன்று மாசம்...

அப்படியானால்...சரியாக நவம்பர் மாதம் குழந்தை பிறந்திருக்க வேண்டும்...

அவள் நிமிர்ந்து, அந்த இல்லத்து தலைவியைப் பார்க்கிறாள்.

கருணையே உருவான 'கன்னிகாஸ்திரி...உலகிலுள்ள எந்தக் குழந்தையும் அநாதை இல்லை—என்று இரு கரங்களை நீட்டி அணைக்கக் காத்திருக்கும் அன்னை மேரியின் பூவுலக வாரிசு...

இப்படிப்பட்டவளிடம் பொய் சொல்லலாமோ...

சொன்னால் என்ன...நான் சொல்கிற மாதத்தில் இங்கே குழந்தை—அதுவும் பெண் குழந்தை—விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தால்தானே...

அவள், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொல்கிறாள்.

"அது நடந்து மூணு வருஷம் இருக்கும்..."

"அப்படியா என்ன மாசம்?"

"நவம்பர் மாசம்...தேதி சரியாத்தெரியாது...குழந்தை ஆஸ்பத்திரியிலே...பிறக்கலே...வீட்டுல பிறந்தது...என் குழந்தை பிறந்தது அஞ்சாறு நாள் ஆகியிருக்குமோ என்னமோ...



MithraVintha

"அப்படியா...நீங்க கொண்டு வந்து விட்டப்ப—குழந்தைக்கு டிரஸ் ஏதாவது போட்டிருந்தீங்களா..."

"இல்லே...ஒரு துணியில சுத்தி..."

"துணி கலர்..."

"அது பழசு...கலர் நினைப்பில்லே..."

"உம்...குழந்தைக்கு தொப்புள்கொடி விழுந்திருந்ததா.. இல்லே, விழாம இருந்துச்சா..."

கொஞ்சம் சங்கடமான கேள்விதான் இதற்கு இவள் என்ன பதிலைச் சொல்லப் போகிறாள் என்பது போல, ஸ்ரீதர், அவள் முகத்தையே பார்க்கிறான்.

"தொப்புள் கொடி...விழல்லீங்க!"

"பெண் குழந்தையின்னுதானே சொன்னீங்க..."

"ஆமா..."

தலைவியும், காரியதரிசியுமாய் சேர்ந்து பழைய ஃபைல்களை ஆராய்கிறார்கள்.

"ரோஸ் மேரி...நீ போய்—செக்ஷன் 'பி'—யில இருக்கற ராணிய கூட்டிட்டு வா..."

ராணி...

ஸ்ரீதர் நிமிர்ந்து உட்காருகிறான்...

யமுனா கண்களில் ஒளி மின்ன, அந்த ஸிஸ்டர் சென்ற வழியையே பார்த்துக் கொண்டு நிற்கிறாள்...

திடீரென அடி வயிற்றில் பயம் பின்னி, அத்தனை தசைகளையும் பந்துபோல இழுக்கிறது...

"ராணி...கம் ஹியர்..."

தலைவி அழைக்க—சின்னஞ்சிறு பெண் குழந்தை—பாதிரமாய், குண்டு முகமாய், சுருலண்டுக் கண்கள் அலைபாய அங்கு வந்து நிற்கிறது...



"ராணி...இங்கே வா...இவங்களுக்கு விஷ்பண்ணு..."

"குட் மார்னிங்!"

"வெரி குட் மார்னிங்!"

ஸ்ரீதர்தான், குழந்தையின் கையைப் பிடித்து குலுக்கி, கன்னத்தைத் தொட்டு முத்தமிடுகிறான்...

தலைவி, யமுனாவைப் பார்த்து புன்னகை மாறாமல் கூறுகிறாள்.

"நீங்க சொன்ன வருஷத்துல கிடந்த ஒரே பெண் குழந்தை இவதான் தொப்புள் கொடி கூட அறுந்து விழாத ஸ்டேஜ்லே நீங்க சட்டை எதுவும் போடல்லேன்னு சொல்றீங்க....ஆனா, எந்தப் புண்ணியவானோ, இல்லே புண்ணியவதியோ, மழையில கிடக்கற குழந்தைக்கு, கொஞ்சம் பெரிய வெள்ளை சட்டை ஒண்ணை மாட்டி விட்டிருந்திருக்காங்க...

"ஓ......"

"இது மாதிரி, குழந்தையப் பெத்து, எங்க வீடு வாசல்லே போட்டுட்டு, அப்புறம் குழந்தை வேணும்னு ஏங்கி திரும்பி வந்து கேட்கறவங்க ரொம்ப குறைச்சல்—பரவாயில்லே...உங்க மனசுல பாசம் இன்னும் இருக்கு... சார்...நீங்கதான் குழந்தைக்கு ஃபாதரா..."

"ஆமா...சின்ன வயசுல ரெண்டு பேருமே அவசரப்பட்டு தப்பு பண்ணிட்டோம்...நான் வடக்கே போயிட்டேன். இவ அவமானத்துக்குப் பறந்து குழந்தைய இங்கே விட்டுட்டு, தன் கிராமத்துக்குப் போயிட்டா...இப்பத்தான் எட்டு மாசத்துக்கு முந்தி எங்களுக்கு கல்யாணமாச்சு...இப்ப நாங்க வடக்கே இருக்கோம். இனிமே, யார் என்ன சொன்னாலும் கவலையில்லேன்னு..."

"வெரிகுட்...உங்களுடைய கருணையான உள்ளத்தைப் பாராட்டறேன்...இதோ, இந்த ரிஜிஸ்டர்லே

MithraVintha

ரெண்டு பேரும் கையெழுத்துப் போட்டுட்டு, உங்க மகளை நீங்க தாராளமா அழைச்சிட்டுப் போகலாம்...

ஸ்ரீதர் ரிஜிஸ்டர் புத்தகத்தில் கையெழுத்திட்டு விட்டு, யமுனாவையும் கையெழுத்துப் போடச் சொல்கிறான்...

''அப்படியே உங்க அட்ரஸ்...''

''ஓ. எஸ்...''

ஸ்ரீதர் தனது விலாசத்தை எழுதிக் கொடுத்து விட்டு, குழந்தையைப் பார்த்து கை நீட்டுகிறான்...

''ராணி இவங்க உங்க அப்பா, அம்மா...''

குழந்தை மலர மலர விழிக்கிறாள்...

''வாம்மா நம்ம வீட்டுக்குப் போகலாம்...''

''அப்ப என் ஃபிரண்ட்ஸ் எல்லாம்...''

''அவங்களை எல்லாம் அடிக்கடி வந்து பார்க்கலாம்.''

ஸ்ரீதர், குழந்தையை தூக்கிக் கொள்கிறான்...தலைவி குழந்தையின் தலையில் தனது உள்ளங்கையை வைத்து ஆசீர்வதிக்கிறாள்.

''கர்த்தர் உன்னை காப்பாற்றட்டும்...''

அருகிலிருந்த சிஸ்டர் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்...

''ராணி ரொம்பவும் கெட்டிக்காரி. அவளை நல்லாப் படிக்க வச்சு டாக்டராக்குங்க...''

''நிச்சயமா...''

ஸ்ரீதர், யமுனா பின் தொடர குழந்தையை தூக்கிக் கொண்டு வெளியே வந்தபோது...

எல்லாமே புது அனுபவமாக இருக்கிறது.

'இது என்னடாது...கல்யாணமாகி எட்டு மாசம் ஆகறது. இன்னும் தாம்பத்திய சுகம்னா என்னன்னே



தெரியல்லே. அதுக்குள்ளே, கையிலே மூணு வயசு பெண் குழந்தை...

அவன், தனக்குப் பின்னால் வரும் யமுனாவை ஜாடையாகப் பார்க்கிறான்.

அவளது முகத்தில் இன்னமும் கலக்கம் படிந்திருக்கிறது...

'நீ என்னவோ நினைத்து, மனதுக்குள் ஒரு கற்பனைக் குழந்தையை உருவாக்கி அதை அனாதையிடுதியில் விட்டிருப்பதை அழகாகக் கதையைக் கூறினாய் பெண்ணே... நானும் உன் வார்த்தைகளை நம்பவில்லை. காக்கை உட்காரப்பனம்பழம் விழுந்த கதையாய்—உன் கற்பனைக் கதைக்கு ஏற்றாற்போல ஒரு குழந்தையும் கிடைத்து விட்டது...இனி நீ என்ன செய்யப் போகிறாய்...''

ஹோட்டலில் அன்று ஒருநாள் தங்கிய அவர்கள், மறுநாளே ரயிலேறுகிறார்கள்...

அப்படி ரயிலேறும்போது—திருமணமாகி, அம்மா, யமுனாவுடன் கிளம்பிய காட்சிதான் நினைப்பில் நிற்கிறது அவனுக்கு...

பாவம் அந்தக் கிழவி...

ஒரு பேரக் குழந்தையைக் கண்ணால் பார்க்கவேண்டுமென்று எத்தனை ஆசையுடன், ஆவலுடன் இருந்தாள்...

ரயிலில்—

குழந்தையை அவன்தான் மடியில் போட்டுக்கொண்டு வருகிறானே தவிர—குழந்தை தங்களிடம் வந்ததிலிருந்து அவன் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை என்பதும் அவன் நெஞ்சில் உறுத்தாமல் இல்லை.

''யமுனா''...

''இந்தக் குழந்தைக்கு நீ தா...''

Mithra Vintha

''அலங்கதான் அம்மாவா?''

''ஆமாடா...''

''அவங்க ஏன் 'உம்' முனே இருக்காங்க...''

''எனக்குத் தெரியல்லே...நீதான் கேட்டுப் பாரேன் ''

''இலங்க அம்மா, அப்பாவும் தொலைஞ்சுப் போயிட் டாங்களாம்...''

'பக்'கெனச் சிரிக்கிறான் ஸ்ரீதர்...

குழந்தை இருப்பதால், அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, யமுனாவிடம் அடிக்கடி பேச முடிகிறது...

''யமுனா...குழந்தை என்ன கேட்கறா பார்த்தியா.''

''என்னவாம்?''

''நீ ஏன் முகத்தை, 'உம்' முனு வச்சிட்டிருக்கேன்னு கேட்கறா...அம்மாவுக்கு சிரிக்கவே தெரியாதோங்கறது குழந்தையோட சந்தேகம்...

''அதான், என் வாழ்க்கையே சிரிப்பாச்சிரிக்க, சிலைப்பேன் குத்திக் கிடக்குதே...இன்னும் என்னவாம்.''

'யமுனா...குழந்தை கிட்ட அந்த மாதிரி அலுப்பைக் காட்டாதே...அதுங்க முகம், கண்ணாடி மாதிரி, நம்ம முகம் எப்படியிருக்கோ, அதையேத்தான் பிரதி பலிக்கும்.''

அவன்.ராணியை உற்றுப் பார்த்து விட்டு'சடக்'கென சமையலறைக்குள் புகுந்து கொள்வாள்.

ஒரு நாள், மாலையில் ஸ்ரீதர், வீடு திரும்பும் பொழுது—ராணி, குழாயடியில் அமர்ந்து, தனது அழுக்கு கவுனைத் துவைத்துக் கொண்டிருக்கிறாள்,

பகீரென்றாகிறது ஸ்ரீதருக்கு...

எத்தனை சின்னப் பெண்... இன்னமும் சரியாய் சாப்பிடக் கூடத் தெரியவில்லை...



இத்தனூண்டுக் குழந்தை செய்கிற வேலையா இது...

கோபம் உச்சந்தலை வரையில் ஏறுகிறது...

''யமுனா...ஏய், யமுனா!!''

அவன், தன்னை மறந்து கத்துகிறான். யமுனா விரித்த தலையை அவசரமாய் அள்ளி முடிந்துக் கொண்டு ஓடி வருகிறாள்.

''குழந்தை என்ன செஞ்சிட்டிருக்கா பாரு...''

அவள், ராணியை ஒரு பார்வை பார்த்து விட்டு, மிக சாதாரணமாகச் சொல்கிறாள்.

''நான், அவளையே கன்குத்திப் பாப்பா கவனிச் சிட்டிருக்க முடியுமா...''

இதற்குள் ராணி, பெரியவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்க்கிறாள். என்ன புரிகிறது அவளுக்கு.

'அம்மாவை அப்பா திட்டறார்... அதுக்கு காரணம், நான் தான்...'

குழந்தை,சோப்புக்கையுடன் ஓடி வந்து யமுனாவைக் கட்டிக் கொள்கிறது.

''அம்மாவை திட்டாதீங்கப்பா...''

''உன் கவுனை யாரு துவைக்க சொன்னதும்...''

''யாரும் சொல்லலையே ... நானே தான் துவைச்சேன், இப்ப, நீங்க உங்க துணியைத் துவைக்கறதில்லையா...அது மாதிரி...''

அவன், ராணியிடமிருந்து இந்த பதிலைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை...

யமுனாவின் பக்கம் திரும்பாமலேயே தன் அறைக்குப் போய் விட்டான்...

ஆனால்—

MithraVintha

கூடத்தில், குழந்தை, யமுனாவிடம் பேசும் குரல்...

"அப்பா கத்தினவுடனே பயந்து போயிட்டியாம்மா..."

"......"

"நாங்கூட...நீ என்னை மத்தியானம் திட்டினியோல்லியோ...எப்பம் பாரு, தெருப் புழுதியில அலைஞ்சு கவுனை எல்லாம் அழுக்காக்கிட்டு வந்தா யார் துவைக்கறது...நான் என்ன, நீ வச்ச வேலைக்காரியான்னு கேட்டியா...எனக்கு அழுகையா வந்தது.

சரி அப்பா மாதிரி, நானும், நம்ம துணிய துவைச்சுக்கறேன்னு... அம்மா... அம்மா...எம்மா அழறே...நான் ஹோம்லே பெரிய அக்கா. அன்னைவெல்லாம், அவங்க அவங்க டிரஸ்ஸை அவங்களே தான் துவைச்சுப்பாங்க..."

குழந்தை அதற்கு மேல் பேசவில்லை. யமுனா, அதை இறுக்கணைத்து முத்தமிடும் ஓசை ஸ்ரீதரன் காதில் தேனாகப் பாய்கிறது...

அடுத்த சில நிமிஷங்களில், ராணி, கையில் பலகாரத் தட்டுடன் ஸ்ரீதரைத் தேடி வருகிறாள்...

"அப்பா-டிபன்..."

"கொண்டா...ராணி சாப்பிட்டாச்சோ..."

"ராணி, அம்மா கூட சாப்பிடுவா..."

"அப்போ, அப்பாவும் ராணி கூட சாப்பிடுவாரு..."

"அது...அப்ப, நம்ம மூணு பேருக்கும் டிபன் இங்கேயே கொண்டு வரச் சொல்லட்டுமா..."

"சொல்லேன்..."

"அம்மாவ்!!"

ராணி, யமுனாவை நோக்கி ஓடுகிறாள். யமுனா, மறுக்கும் குரல் மாத்திரம் அவன் காதில் விழுகிறது......



"சேர்ந்து சாப்பிடறதா...நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க அம்மா உங்களுக்குப் போட்டுட்டு அப்புறமா சாப்பிடறேன்..."

"ஊஹும் ஊஹூம் நீயும் வந்தாதான்...?"

"ஐயோ..."

அவள், அலுப்புடன் உட்கார...ராணி, மூன்று தட்டுகளில் யமுனா செய்த பலகாரத்தை நிரவி, போடுகிறாள்...

"இன்னிக்கு எனக்கு பர்த்டே யாம்..."

"அட இது என்னது யாரு சொன்னாங்க..."

"பர்த் டே வெல்லாம் யாராவது சொல்லணுமா என்ன சும்மாவது இது பர்த் டே பார்ட்டின்னு வச்சுப் போமே..."

ராணியின் குரல், உற்சாகத்துடன் துள்ளுகிறது.

"ஓஹோ...விளையாட்டுக் கோசரமா வச்சுப்போமே...ஆமா பர்த்டேங்கறே...உங்க அம்மா, வெறும் உப்புமா தானா...ஸ்வீட் எதுவும் கிடையாதா..."

"ஏன் கிடையாது...அம்மா கொஞ்சம் போற சர்க்கரை தாயேன்..."

குழந்தை கை விரல்களை தாமரை மொக்கு மாதிரி குவித்தபடி கேட்க, யமுனா, அவளை விடவும் சின்னப் பெண் போல, உள்ளே ஓடி சர்க்கரை டப்பாவை எடுத்து வர...

ராணி ஒரு சின்ன எவர்சில்வர் கப்பில் உப்புமா வைத்தழுத்தி டிபன் தட்டில் அப்படியே கவிழ்க்கிறாள்

உப்புமா, கேக் வடிவத்தில் தட்டில் உட்கார்ந்திருக்க... அதன்மீது சர்க்கரையைத் தூவியவள், தானே உள்ளே

MithraVintha

ஓடிப் போய், கத்தியையும், ஒரு ஸ்பூனையும் எடுத்து வருகிறாள்...

"இதோ கேக் ரெடி..."

"ஆமா... இதெல்லாம் நீ எங்கே பார்த்திருக்கே..."

"ஏன், எங்க ஹோம்லே, சினிமா போட்டுக் காமிப்பாங்களே அன்புள்ள ரஜினிகாந்த் கூட பார்த்திருக்கேனே... சரி எல்லாரும் ஹேப்பி பர்த் டே பாடுங்கோ... நான், கேக் வெட்டறச்சே, மறக்காம கையைத் தட்டுங்க..."

யமுனாவும், ஸ்ரீதரும் சிறு குழந்தைகளாகவே மாறி விட்டார்கள்.

"ஹாப்பி பர்த் டே டூ யூ..."

"ஹாப்பி பர்த் டே டூ யூ..."

"ஹாப்பி பர்த் டே டூ ராணி..."

சிறுமி, உப்புமாவை அழகாக மூன்று துண்டு போட்டு ஸ்பூனால் எடுக்கிறாள்...

"முதல்லே யாருக்கு கொடுக்கறது..."

"உங்க அம்மாவுக்கே கொடு ராணி..."

"ஊஹூம் அப்பாவுக்கு கொடும்மா..."

"சும்மா எல்லா விஷயத்துக்கும் ரெண்டு பேரும் இப்படி சண்டை போட்டுட்டே இருந்தா, நான் என்ன தான் பண்றது..."

ராணி, கன்னத்தில் கை வைத்துக் கொண்டு உட்காருகிறாள்.

அப்புறம் ஏதோ யோசனை செய்தவள், கைகளைச் சொடுக்கிக் கொண்டு உள்ளே ஓடிப்போய், இன்னொரு ஸ்பூனைக் கொண்டு வருகிறாள்.



"ஐடியா!!"

"என்னது..."

"ரெண்டு பேர் கையிலேயும் ஸ்பூன் தரேன். அப்பா அம்மா வாயிலே போடட்டும் அம்மா, அப்பா வாயிலே போடட்டும்..."

"பாப்பாவுக்கு..."

—இது ஸ்ரீதர்.

"பாப்பாவுக்கு ரெண்டு பேருமே ஊட்டுவாங்களாம். பாப்பா எல்லாத்தையும் 'லபக் லபக்'னு காலி பண்ணிட்டு, தோட்டத்துல விளையாடப் போகுமாம்...".

யமுனா சடக்கென அந்த இடத்தை விட்டு எழுந்து விட்டாள்.

ராணி, தனது பெரிய கண்களால், அவளைப் பார்க்கிறாள்.

"ஏம்மா, எழுந்துட்டே..."

"போ... இந்த விளையாட்டு எனக்கு பிடிக்கலே..."

"எனக்கு பிடிச்சிருக்கே..."

"யமுனா..."

ஸ்ரீதர், அவளைப் பார்த்து மெதுவாக அழைக்கிறான்...

"குழந்தை ஏதோ ஆசையில கேட்குது. சரிதான்னு உட்காருவியா... இதுக்குப் போய் இல்லாதப் பொல்லாத பிகுக்காரம் பண்ணிக்கிறியே..."

"பிகுக்காரம்னா என்னப்பா?"

இது ராணியின் அடுத்த கேள்வி.

MithraVintha

இப்பொழுது யமுனாவிற்கும் சற்று தைரியம் வந்தாற் போல இருக்கிறது.

முதல் முறையாக, அவனை நிமிர்ந்துப் பார்த்து, புன்னகையுடன் சொல்கிறாள்.

"குழந்தையோட முகம் மாத்திரம் கண்ணாடி மாதிரி இல்லீங்க காது—டேப்ரிகார்டர் மாதிரி...நாம் என்ன சொல்றோமோ அதை அப்படியே பதிவு செஞ்சு வச்சுடும்..."

இதைச் சொல்லி விட்டு, ராணியின் இரட்டைப் பின்னலை சரி செய்வது போல முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள் அவள்.

அளவு கடந்த வியப்புடன், அவளை எதிட்டுப் பார்த்த ஸ்ரீதர், ராணியிடம் சொல்கிறான்.

"பிசுக்காரம்கறதும்மா... இந்த ஊர்'லே விக்கற ஒரு சவுக்காரத்தோட பேரு..."

"சவுக்காரம்னா..."

"சவுக்காரம்னா... சோப்பு. இப்ப, சித்த முந்தி நீ உன் கவுனுக்குப் போட்டியே...",

"ஓ...அம்மா என்ன சொன்னாலும் கேட்காம, நழுவி, நழுவி ஓடறான்னுதானே, சவுக்காரம்னு பேரு வச்சிருக் கீங்க..."

குழந்தை, கையைக் கொட்டிச் சிரிக்கிறாள், அந்தச் சிரிப்பில், தனது கடந்த காலமே மறந்து விட்டாற் போல இருக்கிறது யமுனாவிற்கு...

'ஓ... இத்தனை சந்தோஷத்தையும் பக்கத்தில் வைத் துக் கொண்டு, எப்படி கவனிக்காமல் இருந்தோம்...'

நினைக்க நினைக்க ஆறவில்லை அவளுக்கு.



தனது சுவாரஸ்யமில்லாத வாழ்க்கைக்கு இப்படி யொரு இனிமை வரும் என்று அவள் நினைத்துப் பார்த்ததே இல்லையே...

அன்று முதல்—

ராணியின் வாழ்க்கையில் மட்டுமல்ல... யமுனா, ஸ்ரீதரின் சாரமில்லாத வாழ்க்கையில் கூட ஒரு சுவை கூடுகிறது...

மாலையில் ஸ்ரீதர் வரும் வரையில், யாமுனா, குழந் தையை உட்கார வைத்து பாடம் சொல்லித் தருவாள், பாட்டு சொல்லித்தருவாள்...

எல்லாம் சம்பூர்ணத்தம்மாள் வீட்டில், குழந்தை ராஜாவை கட்டி மேய்த்ததின் அநுபவம்தான்...

"உம்... போடேன்...ஒண்ணு பக்கத்துல ஜீரோ போடச் சொன்னா, ஜீரோ பக்கத்துல ஒண்ணு போட்டி ருக்கியே...ஒண்ணாம் நம்பருக்கு இந்தப் பக்கம் ஜீரோ இருந்தாத்தான் பத்துன்னு மதிப்பு ஜாஸ்தியாகு..."

...ஜீரோவுக்கு இந்தப்பக்கம் ஒண்ணு இருந்தா?"

"வெறும் ஒண்ணுதான்...ஜீரோவுக்கு மதிப்பு நீக்கே

"அது எப்படி? நான் உன் பக்கத்துல வந்தாலும் உன் குழந்தைதான்... அப்பா பக்கத்துல வந்தாலும் உன் குழந் தைதான்..."

"அதுவும் இதுவும் ஒண்ணா?"

"பின்னே? நீயும் அப்பாவும் சேர்ந்து எனக்கு ஒண்ணு தானே?"

"போடி போக்கிரி..."

ராணி, பகலில் நானும் அம்மாவுமாய் அடித்த லூட்டி முழுக்க மாலையில் ஸ்ரீதர் வந்ததும் சொல்லுவாள்...

MithraVintha

இப்பொழுதெல்லாம் அவன் சமைப்பதோடு சரி, சாப்பாட்டை எடுத்துப் பரிமாறிக் கொள்வதோ, நடுவே தண்ணீர் எடுத்து வைத்துக் கொள்ள மறந்து விட்டான் கூட, எழுந்து ஓடுவதோ தன் துணி மணிகளை துவைத்துக் கொள்வதோ—எல்லாமே அவன் தான். அவனிடமிருந்து சின்ன உதவியைக் கூட எதிர்பார்ப்பதில்லை...

ஒரு முறை—அவன் கேட்கக் கூட கேட்டான்.

"இந்த வீட்டுல எனக்கு எதுவுமே வேலையில்லைன்னா நான் எப்படி இருக்கறது?"

"ஏன் சமைச்சு வைக்கறே...நான் வர்ற வரைக்கும் வீட்டை பார்த்துக்கறே...போறாதா..."

"இத்தனை நாளும், உங்களுக்கு சாப்பாடு பரிமாறி, உங்க துணி மணிங்களை துவைச்சுப்போட்டு, எல்லாமும் நான் தானே செஞ்சுட்டிருந்தேன்..."

"இத்தனை நாள் தான் அம்மாவை ஏமாத்தறதுக்காக. அது மாதிரி நாடகமாடியது. அவங்க செத்ததுக்கு அப்புறமாவும் எதுக்காக, யாருக்காக நடிக்கணும்.

அவன், அவனது வார்த்தைகளைக் கொண்டே திருப்பியடித்த போது அவள் பேச்சிழந்து நிற்கிறாள்.

திருமணமாகி கிட்ட தட்ட எட்டு மாதங்களுக்குள் மறுபடியும் தென்னாட்டு விஜயம்...

"உங்க சித்தி, சித்தப்பாவுக்கும் லெட்டர் போடணுமா?"

"எதுக்கு?"

"எதுக்கா...நாம இவ்வளவு தூரம் வந்திட்டு கிராமத்துக்குப் போய் அவங்களையெல்லாம் பார்க்கலைன்னா தப்பா நினைச்சுக்க மாட்டாங்களா?"

"அவங்களுக்கு மறுபடியும் என்னைப் பார்த்தாத் தான் சிரமம் சங்கடம் எல்லாம்..."



இந்த ஒரு விஷயத்தையாவது இவன், மனசு விட்டு தன்னிடம் சொன்னானே என்கிற திருப்தி ஸ்ரீநருக்கு.

"சரி போனவுடனே, ஏதாவது ஒரு ஹோட்டலிலே ரூம் எடுத்திட்டு தங்குவோம்..."

"அப்புறம்?"

"அப்புறம்...அப்புறம்..."

அவன் திணறுகிறான். ஏதோ, இவளிடமிருந்தும் சுழன்று, ஆறோ, குளமோ விழுந்து சாகலாம் என அவன் நினைத்து ஏதோ ஒரு பொய்யைச் சொன்னது போக, இவள் அதே பொய்யை. உடும்பு பிடியாய் பிடித்துக் கொண்டு விட்டாளே...

அப்புறம் என்ன செய்வது...

சம்பூர்ணத்தின் வீட்டில் வேலை செய்தபோது அந்த பேட்டையில் மிகவும் பிரபலமான, அந்த ஆசிரமத்தைத் தவிர, அவனுக்கு வேறொன்றும் தெரியாது.

அங்கே என்ன கேள்வி கேட்பார்களோ...எப்படியெல்லாம் திண்டாட வேண்டி வருமோ...

அவன் பெஞ்சில் இரு கைகளையும் ஊன்றியபடி, எதிரே அமர்ந்திருக்கும் அவளையே தழுவுவது போலப் பார்த்தபடி சொல்கிறான்.

"இங்கே பாரு...ஏற்கனவே உன்கிட்ட சொல்லிட்டேன்; மறுபடியும் சொல்றேன். நிஜமாவே உன் குழந்தை—ஸாரி—இல்லே நம்ம குழந்தை—அந்த அநாதை விடுதியில இருக்குன்னா, எப்பாடு பட்டாவது அதை வாங்கிட்டு வந்திடுவோம், ஆனா...இந்தப் பிரயாணத்தை ஒரு சாக்கா வச்சுட்டு, என்னை விட்டு தப்பி ஓடணும்னோ, தற்கொலை பண்ணிக்கணும்னோ மட்டும் நினைக்காதே எங்க அம்மா கௌரவமா வாழ்ந்தவங்க நீயும் நானும் என்னிக்காவது ஒருநாள் சந்தோஷமா வாழ்வோம்னு

MithraVintha

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் ஏழலரும், கையில் இட்லி மிளகாய் பொடி, கலந்த சாதங்கள் சகிதம், பக்கத்தில் இருக்கும் அணைக்கட்டிற்கோ, இல்லை மலையடிவாரத்திலுள்ள மகாலட்சுமி கோவிலுக்கோ போய் வருவார்கள்...

வீட்டுக்கு வருவதற்குள் ஆடிப்பாடி, அலுத்து, சலித்து அப்படியே யமுனாவின் தோள் மீது தூங்கி வழிவான் குழந்தை...

"யமுனா... இங்கே கொடு நான் தூக்கிட்டு வரேன்..."

"இருக்கட்டும்..."

"இல்லே கொடு... அவனும் வளர்ந்துட்டா இல்லே... மூச்சிரைக்குது உனக்கு..."

இத்தனையும் பேசலாமே தவிர குழந்தையை அவளிடமிருந்து வாங்கிக் கொள்கையில், தனது விரல்நுனி கூட யமுனாவின் மீது படாமல், அன்று முதலிரவன்றயில் எத்தனை ஜாக்கிரதை காட்டினானோ, அத்தனை ஜாக்கிரதையை இன்று வரையில் கடைபிடித்தான் ஸ்ரீதர்.

பார்க்கில்—இல்லை—அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் கண்ணாமூச்சி ஆட்டம் விளையாடும் பொழுது, ஒரு சில சமயங்களில், கண்கள் கட்டப்பட்டிருப்பதால் ஸ்ரீதர், யமுனாவை ஸ்பரிசிக்க நேர்ந்து விடும்...

அப்பொழுதெல்லாம் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருப்பான், அவன் அவளது புடவைத் தலைப்பை தொட நேர்ந்தால் கூட உடனே, ஏதோ பாம்பைத் தொட்டாற்போல, நெருப்பைத் தொட்டாற் போல கையை வெடுக்கென இழுத்துக் கொள்வான்...

வாய் தன்னையறியாமல் 'ஸாரி' சொல்லும்...



யமுனாவுக்கு, இவனதுப் புவைடக்கமே, மிக பிரமிப்பான விஷயமாய்...

இதோ, இந்த வீட்டுக்குள்—இவருடைய ஆளுகைக்குள் இருக்கும் பெண் நான். என்னை, என்ன வேண்டுமானாலும் செய்ய இவருக்கு உரிமை இருக்கிறது...

பெரிய பங்களாவில், கட்டுக் காவலும் சுற்றங்காரும் பெற்றவரும் சுற்றி நிற்கையிலேயே—எல்லார் கண்களிலும் மண்ணைத் தூவி, தன்னை அனுபவித்த பரசுராமின் முன்—ஸ்ரீதர் இமயமலைதான் சந்தேகமேயில்லை...

இப்பேர்பட்ட மனிதனுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம்...

'அவள் அவன் தனக்கு வேலையிட மாட்டானா என்று காத்திருக்கத் தொடங்குகிறாள்.

இப்பொழுது இந்த இரு தருவங்களுக்கும் இடையில் பாலமாக, ராணி வேறு...

"ராணி, அப்பாவுக்கு சாப்பாட்டுக்கு நேரமாச்சு. போய் கூப்பிடு... போ..."

"அப்பாவுக்கு இப்ப சாப்பாடு வேண்டாமாம். கொஞ்சம் போறட்டும் இருந்தா கேட்கறாரு...அப்படியே எனக்கும்."

"நேரம் கொட்ட நேரத்துல கொடுக்க மாட்டாங்களாம் அம்மான்னு போய் சொல்லு. போ..."

"அப்ப எனக்கு?"

"அப்பாவுக்கு சொன்னதுதான் உனக்கும். ரெண்டு பேரும் ஒழுங்கா, நேரத்துல சாப்பிட வாங்க...எனக்கு தலைக்குமேல வேலை இருக்கு..."



MithraVintha

அவள், வேலையை கவனிக்கும் மும்முரத்தில் ஒரு கணம், தான் சொன்னதை மறந்தே போவாள்...

ஆனால், ராணி, குறுஞ்சிரிப்புடன் மறுபடியும் அவளெதிரில் வந்து நிற்பாள்.

''என்னடீ?''

''உனக்கு தலைக்கு மேல வேலை இருக்குன்னு சொன்னியா...அதைப் போய், நான் அப்பா கிட்ட சொன்னேனா...முதல்லே உங்க அம்மா தலைக்கு மேல என்ன வேலை இருக்குன்னு பார்த்துட்டு வா; நீயும் நானுமா செஞ்சு முடிச்சுடலாம்னு அவர் சொன்னார்...நீ கொஞ்சம் வர்றியா? அப்பாகிட்ட சீப்பு கொடுத்திருக்கேன்...''

''ஐய்யோ...எதுக்கு டீ?''

''உனக்குத்தான் வேலை ஜாஸ்தியா இருக்கறதாலே தலை பின்னிக்கலே நேரமில்லே...இதுவும் தலைக்கு மேல இருக்கற வேலைதானே ...வாம்மா...அப்பாவும், நானும் உனக்குப் பின்னி விடறோம்...''

யமுனாவிற்கு சிரிப்பும், கோபமுமாய் பொங்கிக் கொண்டு வரும்...

ஸ்ரீதர் அடிக்கடி நினைத்துக்கொள்வான்.

'என்ன சுகமாக இருக்கிறது இந்த வாழ்க்கை... இருக்கிற சின்ன வீட்டுக்குள், ஒருவருக்கொருவர் சம்பந்தமே இல்லாத மூன்று ஜீவன்கள்... இப்படியே காலம் முழுக்கப் போய்விட்டால் கூடப் பரவாயில்லை போலிருக்கிறதே...

'எனக்கும்' யமுனாவுக்கும், கணவன், மனைவி, என்கிற அந்தரங்க உறவு இல்லாவிட்டால்தான் என்ன... அதையெல்லாம் மீறி, இந்தக் குழந்தை எங்களுக்கு அம்மா, அப்பா என்கிற பட்டத்தை அளித்துவிட்டதே... இது, காலேஜில் படித்து, பரீட்சை எழுதாமலேயே முதல் வகுப்பில் பாஸ் பண்ணின மாதிரி...



இந்த சுகத்தில்— அவன், அவளிடம் 'உண்மையில் இது உன் குழந்தை இல்லை தானே'— என்கிற கேள்வியையே கேட்க மறந்துவிட்டான்.

ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால், அதுவே மெய்யாகி விடுகிற மாதிரி...

இப்போதைக்கு யாராவது யமுனாவிடம், 'ராணி உன் குழந்தை இல்லையே' என்று கேட்டுவிட்டால் கூட, அவள் தாங்கமாட்டாள், அவளை விடவும் அவன்...

ஒரு குழந்தை முன், தானும் ஒரு குழந்தையாய்... அவன் அமர்ந்து விளையாடும்போது—சற்று தள்ளி நின்று ரசித்துக் கொண்டிருப்பாள் அவள்...

இவர்களது சந்தோஷத்தில், கல்லைத் தூக்கிப் போடுவதுபோல...

சென்னையிலுள்ள அந்த அநாதை விடுதியில் ஒரு புதிய பரபரப்பு...

கப்பல் போன்ற காரில் இன்றைக்கு எல்லாராலும் பேசப்படும் பிரமுகர் பிரமோத், தன் மனைவியுடன் காரில் வந்து இறங்குகிறான்.

## 7

இல்லத்தின் தலைவி முகத்தில் லேசான குழப்பம்.

''நீங்க என்ன சொல்றீங்க சார்?''

''மதர்... என்னைப் பத்தி உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ...''

MithraVintha

"நோ நல்லாலே தெரியும். நீங்கதான் ஒவ்வொரு வருஷமும் உங்க 'பர்த்டே'யை இங்கே இருக்கற குழந்தைங்களோட கொண்டாட நீங்களே... பெரிய பிஸினஸ் மேன்...ஒரு காலேஜ் ஸ்தாபகர் வேற..."

"எல்லாம் இருந்தும்கூட...மதர் ஸுப்பீரிய...உங்க கூட நானும், என் மனைவியும் தனியா கொஞ்சம் பேசணுமே—"

தலைவியின் அறைக் கதவு வெளிப்பக்கமாய் தாளிடப் பட்டது...

உள்ளே. அவர்கள் மூவர் மாத்திரம்...

பிரமோத் ஆரம்பிக்கிறான். அவன் மனைவி விசும்பு கிறாள்.

"இந்த அளவுக்கு பிரபலமா இருக்கிற நான் என் கையில காசு இருக்கிற திமிர்லே, பெண்கள் கிட்ட ரொம்பவுமே மோசமா நடந்துகிட்டேன்... என் பெண் டாட்டிக்கும், எனக்கும் இதுபத்தி. தினமும் சண்டை நடக்கும். ஒருநாள் சண்டை முத்தி, அவளை நான் அடிச்சு விரட்டினப்ப—நல்ல மழைக்காலம் மட்டு மில்லே... இவளுக்கு பிரசவ காலம்கூட....அந்த நேரத்துல எனக்கு இது ஒரு பெரிய விஷயமாப் படலே...இவளும் காரை ஓட்டிட்டுப்போய் எங்கேயோ மோதியிருக்கா... அப்பவே வலிஎடுத்தது. ஏதோ சேரி ஜனங்களோட உதவியில குழந்தையும் பொறந்திருச்சு. அஞ்சாறு நாள், நினைவு நீச்சல்லாம இருந்தவ..."

"மீதிய நான் சொல்றேன் மதர்..."

அவன் மனைவி தொடர்கிறாள்.

"எனக்கு நினைவு வந்து திரும்பிப் பார்த்தப்ப என் பக்கத்துல பெண் குழந்தை...ஏற்கனவே, பெண்ணாப்



பொறந்து, வாழ்க்கையே வெறுத்துக்கிடந்த எனக்கு— எனக்குப் பொறந்ததும் பொண்ணுங்கறதை, அறிஞ்சப்ப வேதனை தாங்க முடியல்லே...எனக்கு உதவி செஞ்சஜனங் களுக்கு என்கிட்ட அப்ப கைப்பையில இருந்த சில நூறு ரூபாய்களைக் கொடுத்தேன்.

'எனக்கு பிரசவம் பார்த்த பொம்பிளைய மாத்திரம் தனியாகூப்பிட்டு, எனக்கு இந்தக் குழந்தை வேண்டாம்; நீ வளர்த்துக்கறதானா வளர்த்துக்க—இந்த அதுக்கு சன் மானமா, இந்த நகைகள் வச்சுக்கன்னு எல்லா நகைங் களையும் கழட்டிக் கொடுத்திட்டு கிளம்பிட்டேன்"அப் புறம், இவர் மேல விவாகரத்துக்கு கேஸ் போட்டேன்... குழந்தை, கார் ஆக்ஸிடெண்ட்லே, வயித்துக்குள்ளேயே செத்துப் பொறந்ததுன்னு சொன்னேன்...கிட்டத்தட்ட மூணு வருஷமா, நாங்க ரெண்டு பேரும், வக்கீல்மூலமா மோதிக்கிட்டிருக்கறப்பதான்..."

'இது நான் சொல்ல வேண்டியது'.

பிரமோத், அவளைத் தடுத்து விட்டுச் சொல்கிறான்...

"பெண்களோட சகவாசம் அளவுக்கு மீறிப் போன தாலோ, நடுவுல கடுமையான வியாதியில் படுத்துட்டேன் மதர். நான் படுத்துட்டேன்னு கேட்டவுடனே இவளுக்கு மனசு கேட்கலே கேஸை வாபஸ் வாங்கிட்டு, என்னைப் பார்க்க ஓடி வந்துட்டா...என்னை மறுபடியும் எழுந்து நடமாட வச்சது இவதான்...ஆனா...இவளுக்கு இன் னொரு குழந்தைய கொடுக்க முடியாத பாவியாயிட்டேன் மதர்...இத்தனை சொத்துக்களுக்கும் வாரிசு இல்லே... டாக்டர், இதைச் சொன்னப்ப நான் கலங்கின கலக்கம். கடவுளுக்குத்தான் தெரியும்...அப்பத்தான் இவ சொன்னா.. எங்க குழந்தை செத்துப் போகலைன்னு...அந்த சேரிக்குப் போய்—இவளுக்கு பிரசவம் பார்த்த பொம்பிளைய தேடி னோம்...கிடைக்கலே...யார் யாரோ கொடுத்த தகவல்படி அவளை ஒரு வழியா கண்டு பிடிச்சதுல, அவ குழந்தைய

MithraVintha

இந்த ஆசிரமத்து வாசல்லே, என் ஒய்ஃப் போன மறு நாளே கொண்டு வந்து கிடத்திட்டானாம்...''

பிரமோத் அறைக்கதவைத் திறந்து தன் டிரைவரிடம் ஏதோ ஆணையிட அவன், காரிலிருந்து நாற்பது வயது மதிக்கத்தக்கப் பெண்மணியை அழைத்து வருகிறான்...

''எத்தனாம் தேதி குழந்தைய இங்கே கிடத்தினே''

''நவம்பர் மாசம் பதினோராம்தேதிங்க...இதெல்லாம் என் புருஷன்தான் ஞாபகம் வச்சுட்டு சொன்னாரு...''

''பிள்ளைய வளர்க்கறேன்னு வாங்கிட்டு அந்தம்மா வோட நகைங்களையும் கை நீட்டி வாங்கிட்டு இப்படி செஞ்சிருக்கியே...இது உனக்கே அடுக்குமா...''

சாந்தமான இல்லத் தலைவிக்கு கூட கோபம் எட்டிப் பார்க்கிறது...

அவள் நடுங்குகிறாள். கண்களில் மிரட்சி மின்ன கூறுகிறாள்...

'இந்தம்மா கொடுத்தப்ப, சரிதான்; வளர்த்துட்டுப் போகலாம்னு வாங்கிட்டேங்க...எங்க வீட்டுக்காரர் அப்ப இல்லே இந்த அம்மா போனதுக்கு அப்பாலே தான் வந்தாரு விசயத்தைக் கேட்டவுடனே 'தாட்பூட்'னு கத்தினாரு...''உன்னை எவண்டி இந்தப் பொறுப்பை ஏத்துக்க சொன்னது—ஏற்கனவே உனக்கு ஆறு இருக்கு. வவுத்துல வேற மூணுமாசம்...இத்த எப்பிடி கவனிப்பே... கொண்டா, அநாதை விடுதிவாசல்லே விட்டுடலாம்'னாரு எனக்கும் சரிதான்னுபட்டுது...ஒரு வெள்ளை சட்டைய மாட்டி, கொட்டற மழையில இங்கதாங்க கட்டடத்து, வெளி வாசப்படியிலபோட்டுட்டுப் போயிட்டோம்... தொப்புள் கொடி கூட அறுகலையிங்க...''

''அந்த நகைய என்னா பண்ணினே...''



''ஆங்...புள்ளைய வளர்க்காதப்ப அந்த நகைய மாத்திரம தொடுவோமா நாங்க...அப்படியே கொண்டு போய் திருப்பதி உண்டியல்லே போட்டுட்டோம்க...''

இப்பொழுது, இவளது கண்கள் பொய் பேசுகிறது.

மதர் ஸுப்பீரியருக்கு,இவளை கவனிக்க நேரமில்லை. தனது உதவியாளர்களுடன், இவர்கள் சொன்ன வருஷத்திய ஃபைல்களைப் புரட்டிப்பார்க்கிறார்.

''முகம் வெளிருகிறது...''

''என்னங்க...''

''கொஞ்சம இருங்க...எனக்கே தலை சுத்துது...''

''மதர், தனது ஆசனத்தில் அமர்ந்து, மூக்குக் கண்ணாடியை துடைத்து மாட்டிக் கொண்டு மறுபடியும் ஆராய்கிறார்...

''இந்த வருஷத்துல நவம்பர் மாசத்துல இங்கே வந்து சேர்ந்த குழந்தைங்கள்லே, நீங்க சொன்ன தேதியில, நீங்க சொன்ன அடையாளத்தோடக் கிடந்த ஒரேயொரு பெண் குழந்தை...''

''அவ நிச்சயம்மா எங்க குழந்தைதான்...மதர். எங்க குழந்தைய நாங்க பார்க்க முடியுமா...''

''வெயிட்...வெயிட் எ மினிட் சார்...இதே குழந்தைய போன வருஷம், ஒரு ஹெல்பெண்ட், அண்ட ஒய்ப்ஃ... உங்களை மாதிரி 'ரிச்' இல்லே...நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவங்க...தங்களோடக் குழந்தையின்னு சொல்லி வாங்கிட்டுப் போயிட்டாங்க...''

''வாட்?''

''எஸ் ராணின்னு குழந்தை பேரு...''

''அவங்க குழந்தை வேற ஏதாவது உள்நோக்கத் தோட...மதர்...நாங்க உங்களையே மலையாட்டம் நம்பி

MithraVintha

வந்தோம்...அது எப்படி சரியான ஆதாரமில்லாம, குழந்தைய நீங்க கொடுத்தீங்க..."

மதரின் புன்னகை கொஞ்சம் விசாலமாகிறது.

"சார்...இதே வருஷம், நவம்பர் மாசம்னு அந்தப் பொண்ணு சொன்னா...தேதி நினைப்பில்லையின்னா... அந்த மாசத்துல வந்த ஒரே பெண் குழந்தை ராணிதான். மத்தபடி அவ சொன்னதுக்கும். குழந்தையோட அடையாளத்துக்கும் ஒரளவுக்கு ஒத்துப் போனதாலே..."

"கொடுத்திட்டீங்களா..."

"பொறுங்க. நாங்களும் அப்படியொண்ணும் பொறுப்பில்லாம நடந்துக்க மாட்டோம்...அந்த தம்பதிங்க கிட்டயிருந்து கையெழுத்து. விலாசம் எல்லாம் வாங்கி வச்சிருக்கோம்..."

"அந்த விலாசம் நிஜமானதுதானான்னு எப்படி தெரியும்?"

"அவங்களைப் பார்த்தா, குழந்தைய எடுத்திட்டுப் போய் மிஸ்யூஸ் பண்றவங்க மாதிரி தெரியல்லே..."

"அப்ப, அந்த அட்ரஸுக்கு நீங்களும் எங்க கூட வாங்க...அவங்க கிட்ட பேசி, எங்க குழந்தைய எங்க கிட்ட வாங்கித் தாங்க..."

"ஷ்யூர்...கண்டிப்பா..."

அன்றைய விமானத்திலேயே அவர்கள் டில்லிக்குப் பறக்கிறார்கள்...நடு நடுவே, பிரமோத், தன் மனைவியின் தோளில் சாய்ந்து அழுகிறான்.

"என் குழந்தை...என் குழந்தை...மறுபடியும் கிடைக்கும்கற நம்பிக்கை இருக்கா உனக்கு..."

டில்லியிலிருந்து மூன்று மணி நேர பிரயாணம். பிரமோத், ஏற்கனவே, தனது டில்லி அலுவலகத்துக்கு



தான் வரும் விவரத்தை தெரிவித்திருந்ததால் அங்கே, விமான தளத்திலிருந்தே—ஸ்ரீதர் வசிக்கும் கிராமத்துக்கு அவர்களை அழைத்துப் போக கார் காத்திருக்கிறது.

அங்கே—

தான் ஆபிசுக்குக் கிளம்பும் போதே, ராணியையும் டவுனிலுள்ள பள்ளிக் கூடத்துக்கு அழைத்துப் போய் விடுவான் ஸ்ரீதர்.

இந்த ஒரு வருஷம் ஓடினதே தெரியவில்லை. இவளை பள்ளியில் கொண்டு விடுவதற்காகவே, எப்படியோ கடனை உடனை வாங்கி, ஒரு சைக்கிளை வாங்கி விட்டான் அவன்.

ராணிக்கு பகல் ஒரு மணி.அனவோடு பள்ளிக்கூடத்தில் அவிழ்த்து விட்டாகி விடும் யு. கே. ஜி தானே...

ஆனால் யு.கே.ஜி.தானே என்று யாராவது ஸ்ரீதரிடம் சொல்லி விட்டால், அவனுக்குப் பொல்லாதக் கோபம் வந்து விடும்.

"அது என்னங்க அப்படி சொல்லிட்டீங்க குழந்தையோட சின்ன மண்டையில எவ்வளவு பாடத்தைத் திணிக்கறாங்க தெரியுமா... எங்க காலத்துல நாங்க அஞ்சாவதுல படிச்சதை இப்ப, யு.கே.ஜி.யில் சொல்லித் தர்ராங்க. அல்ஜீப்ராவாம். ஹிஸ்ட்ரியாம், லாங்வேஜ் வேற ஹிந்தி, இங்லீஷ்... முடியுமாங்க... உங்களாலேயும் என்னாலேயும் முடியுமா?"

அவனுக்கு, அவன் ராணிதான் உசத்தி...யமுனாவிடம் கூட சில சமயங்களில் எரிந்து விழுவான்...

"குழந்தைக்குத்தான் முட்டைக்கோஸ் பிடிக்கவே இல்லே ஏன் அதைப் பண்றே"

MithraVintha

''இங்கே கிடைக்கறதை வச்சுட்டுத் தானே சமைக்க முடியும். இவனுக்காக நாம தோட்டமாப் போட முடியும்...''

''போடறது போடறது...சுத்தி வர மண் இருக்கு. உன் சொத்திலே; என் சொத்திலே...எதை வேணுமானா லும் விதைக்கலாம்... மண்ணைக் கொத்தி நானே நாளைக்கு தோட்டம் போடறேன் பாரு...கத்திரிக்கா என்ன வெண்டைக்கா என்ன...மெட்ராஸ் கொத்தவால் சாவடியையே ராணிக்காக, நம்ம வீட்டு தோட்டத்துல கொண்டு வந்து வைக்கறேன் பாரு...''

சொன்னது மட்டுமில்லை; செய்து காட்டுவான்...

பகல் ஒரு மணிக்கு, மகளுக்காகவே சைக்கிளில் ஒரு நடை ஆபிசிலிருந்து பள்ளிக்குப் போய் அவளை அழைத்துக் கொண்டு வந்து வீட்டில் விட்டு விட்டு யமுனா தயாராக வைத்திருக்கும் டீயைக் குடித்து விட்டு மறுபடியும் லஞ்ச் டைம் முடிவதற்குள் ஆபீசுக்கு ஓடுவான்.

அன்றும் அப்படித்தான்...

யமுனா கொடுத்த டீயை. ஆற்றக் கூட நேரமில் லாமல். ராணி, சிலேட்டில் நூற்றுக்கு நூறு வாங்கிய பெருமையை மெச்சி, அவளை அவசரத்தோடு அவசர மாய் கொஞ்சி, முத்தம் கொடுத்து விட்டு, சைக்கிளில் ஏறி அமரப் போன போதுதான்—

அந்த அன்னப்படகு கார், இவர்கள் வீட்டு வாசலில் வந்து நிற்கிறது...

அந்த கிராமத்தில் இத்தனை சொகுசானக் காரை, யாரும் பார்த்ததில்லையாதலால், தெருவெங்கும் சிறுவர் கூட்டம்...

ஸ்ரீதர், தயங்கியபடியே சைக்கிளை விட்டு இறங்கு கிறான்.



காரின் பின் ஸீட்டிலிருந்து இறங்கிய மதர் ஸுப் பீரியரைப் பார்த்ததுமே, அடி வயிற்றில் கத்தியைப் பாய்ச்சியது போல இருக்கிறது அவனுக்கு.

இது ஏதோ விபரீதம்...

''எனக்கும் என் குழந்தைக்கும் உள்ள உறவை முறிக் கத்தான் இவர்கள் வந்திருக்கிறார்கள்....

உள்ளுணர்வு சொல்கிறது...

''வாங்க''

அவன், கை குவித்து, மதரை வரவேற்கிறான்...கார் முன் ஸீட்டிலிருந்து இறங்கிய பிரமோத்தையும், மதர் ஸுப்பீரியரைத் தொடர்ந்து இறங்கிய பெண்மணியையும் எப்படி வரவேற்பது என்றே தெரியாமல் திகைத்து குழம்பினான்...

''ஹவ் ஆர் யூ ராணி...''

சிறுமி, யமுனாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஊஞ்சலாடிக் கொண்டிருந்தவள். சட்டெனத் திரும்பு கிறாள்

''என்னை யாருன்னு தெரியறா தேபி...''

''ஓ...மதர் குட் ஆப்டர் நூன் மதர்...''

''இவதான் ராணி''

மதர் சொன்னவுடனேயே குழந்தையைப் பாய் தெடுத்து இறுக அணைத்து முத்தமாய் பொழிகிறாள். பிரமோத்தின் மனைவி...

''என் கிட்ட கொஞ்சம்... ஏய், என் கிட்ட கொஞ் சம் கொடும்மா...''

பிரமோத் நிலை கொள்ளாமல் தவிக்கிறார். ஸ்ரீதர் இவர்களை மாறி. மாறிப் பார்த்தபடி, வியர்த்து நிற்க—

மதர் ஸுப்பீரியர். தனது வழக்கமானப் புன்னகை யுடன் ஆரம்பிக்கிறார்...

MithraVintha

''ஒரு சின்ன மிஸ்டேக் நடந்து போச்சு...''

''......''

''ஆக்சுவலா பார்க்கப் போனா—ராணி, இவங்க குழந்தை...நீங்க வருஷமும், மாசமும் சொல்லி, தொப்புள் கொடி விழாதபெண் குழந்தையின்னும் சொன்னதாலே...

ஸ்ரீதர்—'சட்'டென பிரமோத்தின் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கிக் கொள்கிறான்...

''நோ இது எங்க குழந்தை...''

''சார்...நான் சொல்றதைக் கொஞ்சம் நிதானமாக கேட்டாத் தேவலை...''

மதர், மறுபடியும் ஆரம்பிக்கிறார்

''அவ, அவங்க குழந்தை தான்...குழந்தை போட்டிருந்த சட்டை அடையாளம், குழந்தைய எங்க விடுதி வாசல்லே விட்ட தேதி, எல்லாமே ஒத்துப் போறது...''

''அது எப்படி...எங்களுக்குத் தெரியுங்க ... எங்க குழந்தையைப் பத்தி...ராணி உங்க அம்மா பேரென்ன...''

''யமுனா...''

''அப்பா பேரு?''

''ஸ்ரீதர்...''

'' இது என்ன மிஸ்டர், அபத்தமாயிருக்கு...''

பிரமோத் கொதித்து எழுகிறான்.

''ஒரு வருஷம் டிரெயினிங் கொடுத்தா கிளிப்பிள்ளை கூடத் தான் நாம சொல்லித் தந்ததைத் திரும்பிச் சொல்லும். இதை எங்களை நம்ப சொல்றீங்களா...மிஸ்டர், அநாவசியமான வாக்கு வாதம் வேண்டாம். ஸீ இஸ் மை டாட்டர்...பேசாம எங்க கிட்ட ஒப்படைச்சுடுங்க...''

மதர் ஸுப்பீரியர் விஷயத்தை, அமைதியான முறையிலேயே தீர்த்து வைக்க முயற்சிக்கிறார்.



''மிஸ்டர் ஸ்ரீதர் உங்க ஒய்ஃப், அந்த மழைக்கால இருட்டுல எந்த அநாதை விடுதி வாசல்லே குழந்தைய விட்டாங்களோ...அநாதை விடுதியானா இல்லே, ஏதாவது வீட்டுவாசல்லே...''

இந்த நேரத்தில் யமுனா, விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள்.

ஏதோ, ஸ்ரீதரிடமிருந்து தப்பிப்பதற்காக அவள் சொன்ன ஒரு பொய்—இன்று இத்தனை தூரம்—இவ்வளவு பெரிய விவகாரமாக விசுவரூபம் எடுக்கும் என்று அவள் கண்டாளா...

'ஐயோ...இவர்கள் வந்திருப்பதைப் பார்த்தால் குழந்தையைக் கையோடு தூக்கிக் கொண்டே போய் விடுவார்கள் போல் அல்லவா...'

இதற்குள் பிரமோத். பேரம் பேச ஆரம்பித்து விட்டான்.

''மிஸ்டர்...ஏதோ, உங்க குழந்தையின்னு நினைச்சு எடுத்திட்டு வந்தீங்க சரி...இப்ப விவரம் புரிஞ்சு போச்சு இல்லே...இன்னும் என்ன தகராறு...நீங்க. இந்த ஒரு வருஷம் இவளை வளர்த்ததுக்காக எவ்வளவு எதிர் பார்க்கறீங்க...ஒன் லாக்...டூ 'தே...டென்லாக்ஸ்...ஹவ் மச் டு யூ வாண்ட்? ஃபிப்டி லாக்ஸ்...இதோ இப்பவே செக் எழுதித் தரேன்...வாங்கிட்டு குழந்தைய விடுங்க...''

''என்னடா...என்ன சொன்னே...''

ஸ்ரீதர், பிரேமோத்தின் சட்டையைப் பிடித்து, புளிய மரத்தை உலுக்குவது போல உலுக்குகிறான்.

ராணி, ஸ்ரீதரின் ஆவேசத்தைக் கண்டு பயந்து கொண்டு அலறுகிறாள்...

''அப்பா...நீங்க இங்கே வந்திடுங்க...அந்த அங்கிளை போகச் சொல்லுங்க...மதர்...டெல் ஹிம் மதர்...ஹி

Mithra Vintha

இன் நாட் மை ஃபாதர்...எங்க அப்பா, அம்மா ரெண்டு பேரும் இங்கே இருக்காங்க..."

ராணி, பாய்ந்து ஸ்ரீதரின் இரு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள—

"இவளோட என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு நயமா சொன்னா கேட்கலையின்னா, அப்புறம் அடியுதைதான். ஏதோ, இந்த ஒரு வருஷமும் என் குழந்தைய வளர்த்திருக்காளேங்கற ஒரே காரணத்துக்காக...இவளை ஒண்ணும் பண்ணாம விடறேன்...டிரைவர்..."

"எஸ் சார்!"

டிரைவர், உள்ளே வந்து நிற்கிறான்.

"குழந்தைய அப்படியே தூக்கி காருக்குள்ள போடு... மதர், நீங்க வண்டியில ஏறுங்க. சில இடங்கள்லே எல்லாம் நயவு தாட்சண்யம் பார்த்திட்டிருந்தா எதுவும் நடக்காது..."

டிரைவர், ராணியை அப்படியே பந்து போலத் தூக்கி, காருக்குள் தள்ளுகிறான்...

"அப்பா! அப்பா! !"

"ராணீ..."

"என்னை விட்டுட சொல்லுங்க...அம்மா, நீயாவது சொல்லும்மா..."

மதர் ஸுப்பீரியர், மிக அவசரமாகக் காரில் ஏறுகிறார்.

மலைத்து நின்ற மனைவியை ஒரே வார்த்தையில் தெட்டித் தள்ளுகிறான் பிரமோத்.

"போடி...வண்டியில் ஏறு...ஏறுடீன்னா..."

"அப்பா...அப்பா..."



குழந்தையின் அழுகுரல் வெளியே கேட்காதபடி பரபரவெனக் ஜன்னல், கண்ணாடிகள் ஏற்றப்படுகின்றன...

"ராணி...ராணீ..."

தெருவில் ஓட இருந்தவளை, சட்டையைப் பிடித்து இழுத்து, தடுத்து நிறுத்துகிறாள் யமுனா.

அதே வேகத்தில், வாசற்கதவையும் இறுகத் தாழிடுகிறாள்...

அவன் வெறி பிடித்தவன் போலக் கத்துகிறான்...

"விடுடி, விடு என்னை...நான் போலீஸ்லே போய் கம்ப்ளெயின்ட் கொடுக்கப் போறேன்..."

யமுனா, அவனைத் தீர்க்கமாய் பார்க்கிறாள்.

"என்னனு கம்ப்ளெயின்ட் கொடுக்கப் போறீங்க..."

"என் பொண்ணை, நம்ம குழந்தைய கிட்நாப் பண்ணிட்டுப் போறான்னு..."

"நம்ம... குழந்தையா? நமக்கு ஏதுங்க குழந்தை..."

யமுனா, இதைக் கேட்கும் போதேபொங்கிப் பொங்கி அழுகிறாள்.

"சரி...நம்ம குழந்தை இல்லே...உன் குழந்தை..."

"அவ என் குழந்தையும் இல்லையே...நான் உங்ககிட்டயிருந்து பிரிஞ்சு போறதுக்காக சொன்ன பொய்—"

பளார்!!

அவள் வார்த்தைகளை முடிக்கு முன், கன்னத்தில் ஓங்கி அறைகிறான் அவன்.

அவள் விக்கித்து நிற்க—தொடர்ந்து படபடவென அறைகிறான் ஸ்ரீதர்...

MithraVintha

''பொய்...நான் பொய் சொன்னது உங்களுக்கும் தெரியும்தானே...''

''ஆமா...எனக்கும் தெரியும்தானே...''

''அவன் அவளை அடிக்க வேகத்தில் தன்னையும் சேர்த்து பளீர் பளீர் என முகத்திலும், நெஞ்சிலும் அறைந்து கொள்ள...

அவன். அவளது இரண்டு கைகளையும் சேர்த்து இறுக்கப்பிடிக்கிறான்...

முதன் முதலாக அவனை ஸ்பரிசிக்கிற உணர்வே இல்லை அவளுள்...

அவனை அப்படியே தன் தோளில் சாய்த்து முதுகில் ஆதரவால் தடவிக் கொடுத்து...

''ராஜா...என் தங்கம்...அழக்கூடாதும்மா... இப்ப என்ன நடந்துப் போச்சு? விளையாட்டா வந்தது, விளையாட்டுமாதிரியேபோயிட்டாவேணாம்வேணாம்-போதும் அழாதீங்க— நீங்க அழுதா, நான்... நான் என்ன செய்யட்டும் சொல்லுங்க...''

அன்று மாலையும் இரவும் சந்திக்கும் வேளையில்—

அந்த இரண்டு நெஞ்சங்களும் தேற்றுவாரின்றி, சோகத்தினாலே தாங்கள் மிகவும் அந்தரங்கமானவர்களாய் அந்நியோன்ய மானவர்களாய் ஆனது தெரியாமல் ஒருவரையொருவர் தழுவியபடி, ஒருவர் தோளில் மற்றவர் முகம் புதைத்து விம்மிக்கொண்டிருக்க—

இந்த அபூர்வமானக் காட்சியைப் பார்க்க ராணி இல்லையே என்கிற ஏக்கத்துடன், சாமி அலமாரியிலுள்ள விளக்கு, கூட அடங்கியே ஒளிர்கிறது.

முற்றும்

MithraVintha